# அரசு ஊழியர்

பிப்ரவரி 2020

மலர் : 41 இதழ் : 2

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10*


## சூடா ஒரு கோப்பை சூப்


### முகமுடியுடன் முசோலினிகள்!

அண்ணல் காந்தி ஊன்றுகோலை
அடுப்பு விறகாக்கி விட்டு
ஆர்.எஸ்.எஸ்.லத்தியை
தேசத்தின் செங்கோல் ஆக்கும்
திட்டமுடன் வருகிறார்கள்.

பகத்சிங்குகளை உருவாக்கும்
பல்கலைக் கழகங்களை
கோட்சேக்களை உருவாக்கும்
குருகுலங்கள் ஆக்கிடும்
குறிக்கோளுடன் வருகிறார்கள்.

சுதந்திரச் சுடரை
கொள்ளிக்கட்டை ஆக்கி
தேசத் தாயை சிதையேற்ற
தேச எல்லை நெடுகிலும்
திரிசூல வேலிநட்டு
மாபெரிய தேசம் இதை
மரணமுகாம் ஆக்க
முகமுடியுடன் வருகிறார்கள்
முசோலினிகள்.

– நவகவி



தலைவர் மடல்

## இந்திய இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் விடப்பட்டுள்ள சவால்கள்!

இந்திய சாமானிய மக்கள் ஒரு பெரிய கொடூரத்தின் கையில் சிக்கியிருக்கிறார்கள். கடந்த சில மாதங்களாக வயிற்றுக்கு உணவு கிடைக்குமா என்ற சந்தேகத்தில் வைக்கப்பட்டவர்கள் இப்போது வாழ்வதற்கு இடம் இருக்குமா என்ற ஐயத்திற்கு ஆட்பட்டிருக்கிறார்கள். பயமும், வறுமையும் அவர்களை நாற்திசைகளிலும் பந்தாடி வருகிறது. பொருளாதார மேதைகள் கூறும் வீழ்ச்சியும், மந்தமும்; அப்படியெல்லாம் எதுவுமில்லை என்று பாஜக அமைச்சர்கள் கூறும் புள்ளி விவரங்களும் – அடுத்த வேளை உணவுக்காக அலைபாயும் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இதுநாள்வரை அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் இடம்கூட இப்போது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள விவரம் அவர்களுக்குத் புரிந்திருக்குமா என்பது கூட சந்தேகம்தான்.

ஆனால் நாலெழுத்து படித்த நடுத்தர வர்க்க மக்களுக்கு இந்த பொருளாதார மந்தநிலை மற்றும் குடியுரிமை திருத்த சட்டத்தினால் ஏற்படப்போகும் விளைவுகள் ஓரளவுக்கு தெரிந்திருந்த போதிலும் அவர்களில் பலரும் இந்த நிலைக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடத் துணிந்த பின்னரும், போராடும் மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்திட அரசாங்கத்தில் எவரொருவரும் தயாரில்லை. மாறாக அதிகாரங்களை கையில் வைத்துக்கொண்டு தர்க்கரீதியாக கேள்வி கேட்பவர்களையும், துணிச்சலாக போராடுபவர்களையும் வன்முறை வெறியாட்டங்களால் ஒடுக்கப் பார்க்கிறார்கள். ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதலையும், ஜாமியா மிலியா பல்கலைக்கழக மாணவர் மீது இந்துத்வா மதவெறியன் நடத்திய துப்பாக்கிச் சூட்டையும் போலீசார் பார்த்துக்கொண்டு எதுவுமே நடவாதது போல் இருந்ததையும் கண்டு இந்திய சமூகம் அதிர்ந்து போயிருக்கிறது. தில்லி ஷாஹீன் பார்க்கில் பெண்களும் மாணவர்களும் நடத்தும் தொடர்போராட்டத்தில், தினமும் பள்ளி கல்லூரிகள் முடிந்ததும் சாரை சாரையாக வந்து மாணவ மாணவியர் போராட்டத்தில் பங்கேற்பதைப் பார்த்து தானுண்டு தன் வேலையுண்டு என்று இதுவரை இருந்து வந்தவர்களும் இந்தியப் பெருந்தேசம் ஒரு பெரிய சூறாவளிக்குள் சிக்கியிருப்பதை உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

பாஜக அரசின் இந்த பயங்கரவாதம் இந்தியாவின் ஒற்றுமையை சீர்குலைத்து அதன் எல்லைகளை சிதறுண்டு வைத்துவிடுமோ என்ற அச்சம் அரசியல் நோக்கர்களிடம் எழுந்துள்ளது. உத்தவ் தாக்கரே மகாராஷ்டிராவிலும், ஹேமந்த் சோரன் ஜார்கண்டிலும் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது இந்திய அரசியல் மாநில அளவில் செயல்படக்கூடியதாக

மாறியிருப்பதை உணரலாம். யாரும் மத்திய அளவில் இனி ஒருமுகப்பட முடியாது என்ற போக்கின் ஆரம்பமாக இது பார்க்கப்படுகிறது. தில்லிகூட ஆம் ஆத்மியின் ஆட்சியின் காரணமாக மாநில அரசியலாக மாறி யிருக்கிறது. இந்தியாவில் பெரும்பான்மையான மாநிலங்களில் மாநிலக் கட்சிகளும் அவற்றை முன்னெடுக்கும் தலைவர்களும் தலைப்பட ஆரம்பித்து விட்டார்கள். மத்திய அரசு தொடர்ந்து இந்திய இறையாண்மையையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் அச்சுறுத்தி இந்தியாவை ஒரு மதவாத நாடாக மாற்ற முயற்சிக்குமேயானால் ஒவ்வொரு அரசாங்கமும் மாநிலக் கட்சிகளின் கீழான அரசாங்கமாக மாறுவதை தவிர்க்கவோ தடுக்கவோ இயலாமல் போய்விடும். இவ்வாறான வழியில் இந்திய அரசியல் செல்லுமே யானால் மத்திய அரசால் மாநிலங்களை கட்டுப் படுத்துவது என்பது சவாலான காரியமாக மாறிவிடும். இந்தநிலை தோன்றுமானால் ஐரோப்பா போன்ற நிலைமைதான் இங்கு ஏற்படும் என்கிறார்கள் அவர்கள்.

அதீதப் பெரும்பான்மை என்ற ஆயுதம் கையில் இருப்பதால் யாரிடமும் எதையும் கேட்க வேண்டிய தில்லை என்று மத்தியில் ஆளும் பாஜக அரசு சர்வாதிகாரம் செய்வதால் தான் இன்று மக்கள் வீதியில் இறங்கி போராடக்கூடிய நிலை எழுந்துள்ளது. பொதுவாக சட்டங்கள் நிறைவேற்றுவதற்கு முன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினால் அவற்றை நிலைக்குழு விற்கும் தெரிவுக்குழுவிற்கும் அனுப்பிய பிறகுதான் அவை நிறைவேற்றப்படும். தேசிய புலனாய்வு முகமை சட்டத் திருத்தம், முத்தலாக் சட்டம், தகவல் அறியும் உரிமை திருத்த சட்டம், தேசிய மருத்துவ கவுன்சில் சட்டம், தொழிலாளர் சட்டத் திருத்தங்கள், அணைகள் பாதுகாப்புச் சட்டம், மோட்டார்வாகன சட்டம், சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் உள்ளிட்ட பல்வேறு சட்டங்களை உருவாக்குவதையும், திருத்தங்கள் செய்வதையும் உரிய விவரங்கள் இன்றி மத்திய அரசு நிறைவேற்றியிருக்கிறது. இதன் தொடர்ச்சியே குடியுரிமை திருத்தச் சட்டம். இந்த சட்டத் திருத்தங்கள் அனைத்தும் தனது அரசியல் மற்றும் சித்தாந்த எதிரிகளை சட்டவிரோதமாக ஒடுக்குவதை நியாயப்படுத்துவதற்கும், தொழிலாளர்கள் உரிமை மறுப்பு, சிறுபான்மையினர் மீதான தாக்குதல், பொது மருத்துவத்தை சீர்குலைப்பது, கார்ப்பரேட் நிறுவனங் களுக்கு தடையில்லாக் கொள்ளைக்கு வழி செய்வது என்கிற நோக்கத்திலிருந்து கொண்ட வரப்பட்டவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

தமிழக அரசியலைப் பொறுத்தவரை மோடிக்கேற்ற ஜாடியாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் அதிமுக அரசு 5 மற்றும் 8ஆம் வகுப்புக்கான பொதுத்தேர்வுகளை புதிய கல்விக் கொள்கை சட்டமாக்கப்படாத நிலையிலேயே அறிமுகப்படுத்தி பெற்றோர்களையும் மாணவர்களையும் மன அழுத்தத்திற்கு ஆளாக்கியிருக்கிறது. சொந்தக் கட்சியிலே இருப்பவர்களும், கூட்டணிக் கட்சியான பாமகவும் கூட கேட்டுக்கொண்ட பிறகும் மறுபரிசீலனை என்பது அடுத்த ஆண்டுதான் என கைவிரித்திருக்கிறார் உயர்கல்வி அமைச்சர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் அமைச்சரை நேரில் சந்தித்து வலியுறுத்திய பிறகும் பொதுத்தேர்வு 5, 8 வகுப்புகளுக்கு இல்லை என்ற அறிவிப்பு இல்லை. மாறாக, பொதுத்தேர்வு நடக்கும் ஆனால் யாரும் பெயிலாக மாட்டார்கள் என்ற பதில்களைக் கேட்டு பெற்றோர்கள் சிரிப்பதா அழுவதா என்ற நிலையில் இருக்கிறார்கள். இந்த சந்தேகம் இப்போது உயர்நீதிமன்றத்திற்கு வந்து 5 மற்றும் 8ம் வகுப்புகளில் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களை என்ன செய்வீர்கள் என்பதற்கான விளக்கத்தை அரசிடம் கேட்டிருக்கிறது.

நன்கு படித்தும் வேலையில்லாமல் திறமைசாலி இளைஞர்கள் இருக்க, ஒரு கும்பல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தையே குத்தகை எடுத்து கமிஷன் ஏஜெண்ட் வேலையை கடந்த இருபது ஆண்டுகளாக செய்து வந்திருப்பதும் பலமுறை தேர்வுகள் ரத்து செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டும் அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் விடப்பட்டிருப்பதும் குரூப்1 மற்றும் குரூப்2 தேர்வுகளிலும் ஊழல்கள் நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதும் அரசாங்கத்தின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் வெறுப்புணர்வை இளைஞர் களிடம் தோற்றுவித்துள்ளது. பெரிய தலைகளின் ஒப்புதல் இல்லாமல் இத்தகைய முறைகேடுகளுக்கு வாய்ப்பில்லை என்பதால் அவர்களை கைது செய்து சட்டப்படி தண்டித்து அரசாங்கம் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

வேலை வாய்ப்புகளுக்காக காத்திருக்கும் பலகோடி இளைஞர்களின் எதிர்கால கனவுகளைப்பற்றி கவலைப் படாமல் குடியுரிமை திருத்த சட்டத்தை நிறைவேற்றிடத் துடிக்கும் பாஜகவின் தலைவர்களும், இந்தியாவின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமான நிலைக்கு போய்விட்ட நிலையிலும் அதை தூக்கிப்பிடிக்கும் நடவடிக்கைகளைத் துவக்காமல் கார்ப்பரேட்டுகளுக்கு கடன் தள்ளுபடி, வரிச்சலுகைகள் என வாரி வழங்கிக் கொண்டிருக்கும் மோடி அரசும், அஹிம்சை வழியில் போராடி நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத்தந்த காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்டதை நியாயப்படுத்தும் பாஜக, ஆர்எஸ்எஸ் அமைப்பினரும், தன்னுடைய ஆன்மிக அரசியலுக்கு தந்தை பெரியாரை துணைக்கு இழுக்கும் திரைப்பட நடிகர் ரஜினிகாந்தும், ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு கடிதம் எழுதிவிட்டு தன்னுடைய கடமை முடிந்துவிட்டதாக நினைக்கும் தமிழக முதல்வரும், குடியுரிமை திருத்தச் சட்டத்தை தமிழக அரசு ஆதரிக்கிறதா? எதிர்க்கிறதா? என்ற நிலைப்பாட்டினை சஸ்பென்சாக வைத்திருக்கும் எடப்பாடியும் அவர்தம் அமைச்சர்களும்தான் இன்றைய இந்திய மற்றும் தமிழக அரசியலின் நாயகர்கள். இவர்களால் ஊழலற்ற, சாதிபேதமற்ற, சமத்துவ ஜனநாயகம் மலர்ந்துவிடும் என்பது கானல்நீராகிவிட்ட நிலையில் இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒற்றுமைக்கு விடப்பட்டுள்ள சவால்களை மாணவர்கள், இளைஞர்கள். ஆசிரியர்கள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் என நாட்டின் மீது தேசப்பற்று கொண்ட நாம் அனைவரும் ஒன்றுபட்டு முறியடிப்போம். ❖

# ஜனவரி 8 அகில இந்திய வேலை நிறுத்தம்

## வரலாற்றுச் சிறப்புமிக்க போராட்டம்

**ந**ம் மரணத்தின் எல்லை வரை மட்டுமல்ல...

மரணத்திற்குப் பின்பும் வரும் தலைமுறைகள்...

காலந்தோறும் நம் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும்...

வார்த்தைகளில் வடிக்க முடியா... எழுச்சிமிகு போராட்டம்...

ஆம் ஜனவரி 8ஆம் தேதி அகில இந்திய வேலைநிறுத்தம் இந்திய தொழிலாளி வர்க்கம் அழைப்பு விடுத்திருந்த பொது வேலைநிறுத்தம் வெற்றி பெற்றுள்ளது. பத்து மத்திய தொழிற் சங்கங்கள் மற்றும் அனைத்து துறைவாரி சம்மேளனங்கள், பொதுத்துறை நிறுவன ஊழியர் சங்கங்கள், மத்திய அரசு ஊழியர்கள், மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் என பல அமைப்புகள் பங்கேற்ற இந்த வேலைநிறுத்தம் நாட்டை நாசகரப் பாதையில் நடத்திச் செல்லும் மத்திய, மாநில அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையாக அமைந்துள்ளது.

இந்திய தேசத்தின் மக்கள் தேசம் பாதுகாக்கப்படும் என்று வாக்களித்த மக்களுக்கு ஆட்சியதிகாரம் கையில் இருக்கிறது என்பதற்காக அதிகார மமதையுடன் ஊழியர்களுக்கும், மக்களுக்கும் விரோதமாக நடந்து கொள்கிறது. மத்தியில் அமைந்துள்ள மோடி அரசு நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் பெரும்பாலும், மக்களுக்கும் ஊழியர்களுக்கும் எதிரானதாகவே அமைந் துள்ளன. தொழிலாளர் நலச் சட்டங்களை திருத்துவதன் மூலம் குறைந்தபட்ச சட்ட சமூக பாதுகாப்பிலிருந்தும் துண்டிக்கப்பட்டு தொழிலாளர்கள் நிர்க்கதியாக விடப்படுகிறார்கள். அமர்த்து துரத்து என்று பொதுத்துறை நிறுவனங்கள் சூறையாடப்படுகின்றன. இனியும் இதை அனுமதிக்க முடியாது என்று இந்திய மக்கள் போர்க்கோலம் பூண்டதன் வெளிப்பாடு நாடு தழுவிய வேலைநிறுத்தம்.


மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கை களினால் பாதிக்கப்படும் மக்கள் ஒன்றிணைந்து போராடுவதை தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு மதரீதியாக மக்களை கூறுபோடும் சட்டங்களும், திட்டங்களும் கொண்டு வரப்படுகின்றன. தேசம் முழுவதும் அச்சுறுத்துகின்ற வகையில் குடியுரிமை சட்டத் திருத்தம் உள்ளிட்ட மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கெதிராக இந்த வேலைநிறுத்தம் நடைபெற்றுள்ளது.

இந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு பல்வேறு அடக்குமுறைகளை ஏவிவிடப்பட்டது மத்திய அரசு. அத்தனையும் உடைத்தெறிந்து தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், வர்த்தகர்கள் ஒன்றுபட்டு போராடியுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தத்தை உடைப்பதற்காக தமிழக அரசு காவல்துறை மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகவும் இழிவானவை, இதுவரை இல்லாதவை.

அரசு தலைமைச் செயலாளர் சுற்றறிக்கை, அரசு அலுவலகங்களுக்குச் சென்று நேரடியாக காவல்துறையினர் மிரட்டியுள்ளனர். மேலும் மத்திய, மாநில அரசு ஊழியர்களின் வீடுகளுக்கே சென்று மிரட்டி விட்டு வந்துள்ளனர். இது அரசியல் சாசனம் வழங்கியுள்ள அடிப்படையான ஜனநாயக உரிமைகளுக்கு எதிரானது.

மத்திய அரசுக்கு, தன்னுடைய எஜமான விசுவாசத்தை காட்டுவதற்காக தமிழக அரசு ஜனநாயக உரிமைகளை காலில் போட்டு மிதிப்பதை அனுமதிக்க முடியாது. பல்வேறு வாக்குறுதிகளை வாரி வழங்கி ஆட்சியை பிடித்த மத்திய அரசு தன்னுடைய சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக ஒரு யுத்தத் தையே தொடுத் துள்ளது. இதற்கு கருத்தாலும் கரத்தாலும் உழைக்கக்கூடிய அரசு ஊழியர், ஆசிரியர், தொழிலாளி வர்க்கம் விடுத்துள்ள எச்சரிக்கைதான் அகில இந்திய அளவிலான வேலைநிறுத்தம்.



மேற்கண்ட மத்திய, மாநில அரசுகளின் ஊழியர் விரோத மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக நடத்தக்கூடிய அனைத்து வேலைநிறுத்தங்களி லும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அனைத்துத் துறைவாரி சங்கங்களின் போராட்டக் குழுவும் இணைந்து மிக எழுச்சிகரமாக கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு 15.12.2019 அன்று நடைபெற்றது. அதன் அடிப்படையில் அகில இந்திய வேலை நிறுத்தத்தில் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து 21.12.2019 அனைத்து தொழிற்சங்கங்களின் போராட்டக் குழு முடிவு செய்யப்பட்டு மாநிலம் முழுவதும் மாவட்டங்களில் நோட்டீஸ், போஸ்டர் போடப்பட்டு மிகச்சிறப்பாக பிரச்சாரம் நடைபெற்றது. துறைவாரிச் சங்கங்களும் நோட்டீஸ், போஸ்டர்களும் போடப்பட்டது. மாநிலம் முழுவதும் பிரச்சாரக் கூட்டங்கள் நடைபெற்றது.

இதுவரை நடைபெற்ற வேலை நிறுத்தங்களை விட இந்த வேலை நிறுத்தத்தில் இந்தியா முழுவதும் 25 கோடி பேர் பங்கேற்றுள்ளார்கள். இந்த மாபெரும் போராட்டம் மத்திய அரசின் கொள்கைகளால் ஒட்டுமொத்த இந்திய மக்களின் வாழ்நிலைமையும் வாழ்வாதாரங்களும் மிக கடுமையாக துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிற இந்த தருணத்தில் இந்த போராட்டம் நடந்துள்ளது. அகில இந்திய வேலைநிறுத்தத்தின் புதியதொரு அம்சம் என்னவென்றால், விவசாய துயரத்தின் உச்சகட்டத்தை சுட்டிக்காட்டி அரசு எச்சரிக்கும் பொருட்டு பெரும் எண்ணிக்கையில் விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். மேலும் சட்டத்தின் மீதான கொடூரமான தாக்குதலுக்கு எதிராக களத்தில் சமர் புரிந்து வரும் மாணவர் சமூகம் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளார்கள். அதனை தொடர்ந்து இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களில் மிக எழுச்சியோடு குறிப்பாக கடந்த காலங்களை விட இந்த அகில இந்திய வேலைநிறுத்தம் நடைபெற்றது

**வேலையின்மை**

இந்த வேலை நிறுத்தத்தின் பிரதான கோரிக்கை வேலையின்மைதான். 45 ஆண்டுகள் இல்லாத நிலை இந்திய தேசத்தில் ஏற்பட்டுள்ளது. இது தாராளமயத்தின் விளைவு. மத்திய அரசு கணக்கெடுப்புகளின் விபரங்களின்படி 2011-12ல் 2%மாக இருந்த வேலையின்மை 2017-18ல் 6%மாக உயர்ந்திருக்கிறது. தேவைக்கும் தகுதிக்கு ஏற்ற வேலை இல்லை என பேசிக் கொண்டிருந்த நாட்டில் தற்போது வேலையே இல்லை என பேசும் கட்டத்தை எட்டிருக்கிறோம். மத்திய அரசு இந்திய தொழிலாளி வர்க்கத்திற்கு கொடுத்திருக்கும் வெகுமதி. (உதாரணம்) அரசின் செய்தித் தொடர்பு அதிகாரி அமிதாப்ஜா சொன்ன விஷயம் என்ன தெரியுமா? ஓலா மற்றும் உபர் நிறுவனங்களில் பாருங்கள் அங்கு வேலை பார்க்கும் டிரைவர்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறது பாருங்கள். இவையெல்லாம் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் வேலைகள் என்கிறார், தவறான தகவல் கூறுகிகிறார்.

இந்தியாவில் வேலைவாய்ப்பைப் பற்றிய தகவல் கொடுக்கும் அந்நிறுவனம் என்எஸ்எஸ்ஓ. அந்நிறுவனம் 2017-18ம் ஆண்டுகளில் ஒரு விசயம் தெரியவருகிறது. 2011-12ஆம் ஆண்டில் 47 கோடி பேர் வேலைகளில் இருந்துள்ளனர். அதன் எண்ணிக்கை 2017-18ல் 45 கோடியாக குறைந்து இருக்கிறது. இடைப்பட்ட காலத்தில் 2 கோடி பேர் வேலை இழந்துள்ளனர். 15-லிருந்து 29 வயது வரையிலான வயதில் இருக்கும் பெண்களில் வெறும் 15% பெண்கள் மட்டுமே வேலைகள் பெற்றிருக்கின்றனர். வேலைகளில் பங்கு பெறும் பெண்களின் விகிதத்தைவிட உலக அளவில் எடுத்து பார்த்தால் இந்தியாவுக்கும் கீழே 9 நாடுகள் மட்டுமே இருக்கிறது. அதாவது பிற நாடுகள் எல்லாமும் இந்தியாவைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கியிருக்கிறது. வேலையின்மை 6% உயர்ந்தது உண்மை. அதை தேர்தல் வரை வெளியிடாமல் மத்திய அரசு மறுத்துள்ளது.

மக்களுக்கு வேலைகளை கொடுக்க முடியாத அரசு அதை மறைக்கவும் முயன்று கொண்டிருக்கிறது. மத்திய அரசின் கையாலாகாத்தனம் வெட்டவெளிச்சமாகிவிடக் கூடாது என்பதற்காக இந்தியாவின் ஒட்டுமொத்த கணக்கெடுப்பு முறையை முடக்கப் பார்க்கிறது.

வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை குறித்து மத்திய அரசு விளம்பரப்படுத்துகிறது. முத்ரா வங்கியின் மூலம் முத்ரா கடன்களின் வழியாக பெருமளவுக்கான வேலை வாய்ப்பு கிடைத்திருப்பதாக சொல்கிறார்கள். பல



கோடிகள் மதிப்பிலான கடன் கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்கிறார்கள். அவற்றை கூர்ந்து கவனித்தால் அப்பட்டமான பொய் என்பது தெரியவரும். வங்கியில் குறுந்தொழிலுக்கென ஏற்கனவே அவர்கள் வாங்கியிருந்த கடங்களை முத்ரா திட்டத்தில் கொடுத்ததாக கணக்கு காட்டியிருக்கிறார்கள். முத்ரா கடன்களை பெற்றவர்களில் 20% பேர் மட்டும்தான் புதிய தொழிலை தொடங்கியிருக்கிறார்கள். 80% பேர் ஏற்கனவே ஏதோவொரு வகை தொழில் செய்து கொண்டிருந்தவர்கள் அரசின் ஆய்வுப்படியே பார்த்தாலும் முத்ரா திட்டம் மிகப்பெரிய தோல்வியை கண்டிருப்பது உறுதியாகிறது.

வேலை வாய்ப்பை உருவாக்கவும், அதிகப்படுத்தவுமான ஒரு பெரும் போராட்ட இயக்கத்தை நடத்தி நாம் அரசை நிர்ப்பந்திக்க வேண்டும். நூறு நாட்கள் வேலைதிட்டம் என்பது குறைந்தபட்சம் 200 நாட்கள் வேலைத் திட்டமாக அதிக ஊதியத்துடன் உயர்த்தப்பட வேண்டும்.

நகர வேலைவாய்ப்புகளுக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டுமென நாம் கோர வேண்டும். நகர வேலை வாய்ப்பு இந்தியாவிலேயே இதுவரை இரண்டு மாநிலங்களில் மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. திரிபுரா மற்றும் கேரளா இரண்டும் இடதுசாரிகள் அரசமைத்த மாநிலங்கள், பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு திரிபுராவில் தற்போது நகர வேலைவாய்ப்பு உத்தரவாதம் இல்லாமல் போய்விட்டது. கேரளாவில் மட்டுமே இப்போது இருக்கிறது.

உலக தொழிலாளர் அமைப்பின் 2018 அறிக்கையின்படி உலகம் முழுவதும் 750 லட்சம் 17.5 கோடி இளைஞர்கள் வேலைவாய்ப்பற்றவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக அரபு நாடுகளில்-30.6%, லத்தீன் அமெரிக்க நாடுகளில்-17%, ஐரோப்பிய யூனியன் நாடுகளில்-18.4%, தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளில் 50% என இளைஞர்கள் வேலை வாய்ப்பற்றவர்களாக வீதியில் விடப்பட்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் 15 வயது முதல் 29 வயதுக்குட்பட்ட இளைய தலைமுறையினர் 25% பேர் வேலையில்லாமல் கல்வியோ, தொழிற்பயிற்சியோ கிடைக்கப் பெறாமல் திக்கற்றவர்களாக விடப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய சூழலில் இளைஞர்கள் தங்களது சொந்த பூமியை விட்டு வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்கிறார்கள். உலகம் முழுவதும் வேலை தேடி புலம் பெயர்ந்தவர்கள் சுமார் 5.1 கோடி பேர், இதில் 15 வயது முதல் 29 வயது வரை உள்ள இளைஞர்கள் என்பதும் அதில் இந்தியா போன்ற வளர்முக நாடுகளை சேர்ந்தவர்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

உலகம் முழுவதும் மிகத் தீவிரமாக எட்டியுள்ள வேலையின்மை எனும் முதலாளித்துவ பயங்கரம் இந்தியாவில் 6.1% என்ற அளவை எட்டியிருக்கிறது. 2017-18 தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டிருக்கும் விவரம் முன்னெப்போதும் இல்லாத வேலையின்மை இந்தியாவில் ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு முன்பு 99-2000, 2004-2005, 2009-10 ஆண்டுகளில் ஒரு கோடி வேலையற்ற இளைஞர்கள் எண்ணிக்கை 2011-12ம் ஆண்டில் 1.08 கோடியாக 2 மடங்கு அதிகரித்துள்ளது. இந்த காலகட்டத்தில் வெறும் மத்திய அரசாங்கத்தில் 5 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொழிலாளர் சந்தையில் நாளுக்கு நாள் வேலையில்லா பட்டாளத்தின் எண்ணிக்கை அதிகரித்து 2017-18ம் ஆண்டு கணக்குப்படி நகர்ப்புற தொழிலாளர் சந்தையில் 2.64 கோடி புதிய இளம் தொழிலாளர்கள் இணைந்துள்ளனர். தமிழகம் உட்பட பல மாநிலங்களில் 5% அதிகமான வேலை வாய்ப்பின்மை ஏற்பட்டிருக்கிறது என்பதை தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வேலைக்கு எடுக்காவிட்டால் கூலி அல்லது சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை. வேலையில்லா பட்டாளம் மிகப்பெரும் எண்ணிக்கையில் இருப்பதைக் காட்டி ஏற்கனவே வேலை இருப்பவர்களின் அனைத்து உரிமை களையும் பறித்துக் கொள்ள முடியும். (உ-த: பிஎஸ்என்எல் நிறுவனம் கட்டாய ஓய்வு என்ற பெயரில் 79 ஆயிரம் பேர் வீட்டுக்கு அனுப்புகிறது) அதிக நேரம் குறைந்த ஊழியர்களை கொண்டு வேலை

நேரத்தை அதிகரித்து குறைந்த செலவில் கூடுதல் உற்பத்தி அல்லது பணி செய்ய முடியும் என்று முதலாளித்துவம் அதிதீவிரமான உழைப்புச் சுரண்டலை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. எனவே வேலையின்மை என்பது முதலாளித்தும் உற்பத்தி செய்திருக்கிற பயங்கரமான சுரண்டல் ஆயுதம்.

எனவே வேலையின்மைக்கு எதிராக புதிய பென்ஷன் திட்டம் ரத்து, பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரைவார்க்கும் போக்கு, மத்திய, மாநில அரசு அலுவலகங்கள் மறு சீரமைப்பு என்ற பெயரில் தனியார்மயம், ஒப்பந்த முறை, அவுட்சோர்சிங் முறை ஒழிக்கவும், புதிய புதிய சுரண்டல் வடிவங் களுக்கு எதிராக உலக பாட்டாளி வர்க்கம் உலகெங்கிலும் இடைவிடாதப் போராட்டங்கள் விரிவுபடுத்திக் கொண்டு வருகிறது. ஒரு பகுதியாக உலக முதலாளித்துவத்திற்கு எதிரான உலக தொழிலாளி வர்க்கம் மகத்தான யுத்தத்தின் ஒரு பகுதிதான் ஜனவரி 8 அன்று இந்திய தேசமே ஆர்த்தெழுந்த போராட்டம். இந்த பொது வேலைநிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பங்கெடுத்துள்ளது.

தமிழக அரசு பல்வேறு அடக்குமுறைகளை பழிவாங்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது கண்மூடித்தனமாக கடைப்பிடித்தாலும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இந்த தேசம் காக்கும் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு மத்திய, மாநில அரசுகளின் ஊழியர் விரோத, மக்கள் விரோத போக்கினை விரிவான முறையில் ஊழியர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை மிகச் சிறப்பாக மாவட்ட, வட்ட, முன்னணி ஊழியர்கள் பிரச்சாரத்தை மேற்கொண்டு உள்ளார்கள். இந்த தேசம் போராட்டத்தில் பங்கு பெற்று இந்த அகில இந்திய வேலைநிறுத்தத்தை வெற்றி அடையச் செய்துள்ளனர். தொடர்ந்து போராட்டம் நடத்துவோம். உழைக்கும் மக்களின் போராட்டங்களே இறுதி வெற்றி பெறும். இதுவே உலக அனுபவம். ❖

## தோழர் ஜெ.பட்டாபி அவர்களின் அரசு பணி நிறைவு மற்றும் சங்கப் பணி பாராட்டு விழா

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வடசென்னை மாவட்டத்தின் முன்னாள் செயலாளர் ஜெ.பட்டாபி அவர்களின் அரசு பணி நிறைவு மற்றும் சங்கப்பணி பாராட்டு விழா 31.1.2020 அன்று மாலை 6.00 மணியளவில் வடசென்னை மாவட்டம் சார்பில் திருவல்லிக்கேணி தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு வடசென்னை மாவட்டத் தலைவர் ப.சுந்தரம்மாள் தலைமை தாங்கினார். மாநில தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் வெண்கலத்தாலான மாவீரன் சிலையை நினைவு பரிசாக வழங்கினார்கள். மாநில துணைத் தலைவர் மொ.ஞானத்தம்பி பட்டாபிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். தனது மகனின் பணிநிறைவு விழாவை காண வருகை புரிந்த அன்னாரது தாயார் ஜெ.அலமேலு அவர்களையும் அன்னாரது இணையர் ப.சூரியகலா அவர்களையும் சிறப்பிக்கும் விதமாக இருவருக்கும் மாநில செயலாளர் தெ.வாசுகி பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.*

*மேலும் மாநில நிர்வாகிகள் உ.சண்முகம், இரா.ந.நம்பிராஜன் மற்றும் முன்னாள் முன்னாள் மாநில பொருளாளர் தங்கராஜ், முன்னாள் மாநில துணைத் தலைவர் எம்.சுப்பிரமணியன் ஆகியோரும் கலந்துகொண்டு ஜெ.பட்டாபியை சிறப்பித்தனர். மேற்படி நிகழ்விற்கு தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் தலைவர் நெ.இல.ஸ்ரீதரன், தமிழக ஒற்றுமை மேடை ஒருங்கிணைப்பாளர் ஜி.செல்வா, தென்மண்டல இன்சூரன்ஸ் ஊழியர் கூட்டமைப்பு துணைத் தலைவர் கே.சுவாமிநாதன், சென்னை மாநகராட்சி செங்கொடி சங்கத்தின் துணைத் தலைவர் எல்.சுந்ததரராஜன், அரசு ஊழியர் சங்க முன்னாள் பொதுச் செயலாளர் இரா.சீனிவாசன், முன்னாள் மாநில பொருளாளர்கள் ந.ஞானகுரு, வி.தேவன், முன்னாள் மாநில நிர்வாகிகள் இரா.ஜோதி, எஸ்.ஏ.வெற்றிராஜன், கே.எம்.தியாகராஜன், பி.எஸ்.அப்பர், தலைமை செயலக ஊழியர் ஜி.வெங்கடேசன், அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகி தெ.வாசுகி, தென்சென்னை மாவட்டத் தலைவர் டேனியல் ஜெயசிங், வடசென்னை மாவட்ட செயலாளர் ம.அந்தோணிசாமி, நிர்வாகி வி.விஜயகுமரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். நிகழ்ச்சியின் இடையில் தலைமை செயலக ஊழியர் சங்க நிர்வாகி ஆஸரா பர்வீன் ஜெ.பட்டாபியை வாழ்த்தி வாசித்த கவிதை அனைவரின் மனதை நெகிழ்ச்சியடைய செய்தது. பட்டாபி அவர்களின் இணையர் ப. சூரியகலா தனது இணையரை பற்றி எழுதிய கவிதையை மாவட்ட செயலாளர் அந்தோணி வாசித்தபோது அனைவரின் நெஞ்சை உருக்குவதாக இருந்தது. தோழரின் தியாகம் ஈடுஇணையற்றது.*

# ‘தோழர் பட்டாபி’யை நினைத்தால் கொட்டாவி மட்டுமல்ல கெட்ட ஆவியும் ஓடிவிடும்!

அவருக்கு ஆஜானுபாகுவான உடம்பு அப்போது. எட்டுநாள் உண்ணாவிரதப் போராட்டத்திற்குப் பிறகு தமிழக முதல்வரை தடையை மீறி சந்திக்க போனபோது போலீஸ் லத்தி சார்ஜில் காயமடைந்து சட்டையின்றி அரை உடம்பில் அவரைப் பார்த்து பதறிப் போனவர்களின் நானும் ஒருவன். சங்கத்தின் போராட்டம் எதுவென்றாலும் முன்வரிசையில் நிற்கும் தோழர்களில் பட்டாபி முதன்மையானவராக இருப்பார். போனில் பேசிமுடித்த பதினைந்தாவது நிமிடத்தில் என்னுடைய அலுவலக வாயிலிலிருந்து போன் செய்வார் “தோழர் நான் பட்டாபி பேசறேன். பொதுச் செயலாளர் நீங்க ஆர்டர் காப்பி கொடுப்பீங்க, வாங்கிட்டு வாங்கன்னு சொல்லியனுப்பினாரு’’ என்பார். நான் அப்போதுதான் ஆர்டர் காப்பியை ஜெராக்ஸ் எடுத்துக் கொண்டிருப்பேன். தலைசொறிந்தவாறே மன்னிப்பு கேட்டுக்கொண்டு ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்குப் பிறகு உத்தரவு நகல்களை கொடுப்பேன். அதனால் அடுத்தமுறை சங்கத்திலிருந்து ஏதாவது கொடுத்தனுப்பினாலும், வாங்க வந்தாலும் யார் வர்றாங்க என்ற கேட்டுக்கொண்டு தோழர் பட்டாபி என்றால் அரைமணி நேரம் கழித்து வரச்சொல்லுங்கள் என்று கொஞ்சம் அலர்ட் ஆகிக் கொள்வேன். சங்க வேலைகளில் சிட்டுக்குருவியாய் சிறகடிக்கும் சிங்கம் பட்டாபி. அவரை நினைத்தாலே கொட்டாவி மட்டுமல்ல கெட்ட ஆவி ஏதேனும் இருந்தால்கூட ஓடிவிடும். ஏதேனும் பிரச்சனைகளுடன் தன்னை யாரேனும் சந்திக்க வந்தால் அவர்களிடம் எல்லாவற்றையும் பொறுமையுடன் கேட்பார். வடசென்னை அலுவலகத்தில் பல தருணங்களில் அவர் தன்னிடம் வரும் தோழர்களிடம் ஆலோசனைகள் கூறும் லாவகம் அலாதியானது. ‘எந்த பிரச்சனைக்கும் ஒரு வழியிருக்கு தோழா’ என்று தன்னிடம் வரும் தோழர்களிடம் பாசிட்டிவாக பேசுவார். அந்த நேர்மறையான பேச்சே நாடி வந்த தோழர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி விடும்.

பல சமயங்களில் பல தோழர்களுக்காக கோர்ட் சம்பந்தமான அறிவுறுத்தல்களுக்கு தயங்காமல் ஆலோசனை கேட்டிருக்கிறார். சில பிரச்னைகளில் வழக்கு தொடர்ந்தால்தான் விமோசனம் என்ற நிலையில் வழக்கு தொடர தோழர்களுக்கு உதவுவார். பெயருக்குத்தான் அவர் வடசென்னை மாவட்ட நிர்வாகி, ஆனால் உண்மையில் அவர் மாநில மையத்தின் பல வேலைகளை களிப்போடு செய்து வந்தார். எந்தக் கூட்டங்கள் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கும் தோழர் பட்டாபியை தொடர்பு கொண்டால் போதும் எல்லா ஏற்பாடுகளுக்கும் வழி சொல்வார். அல்லது முன்னின்று செய்து கொடுப்பார். தனக்கு நியாயமெனப் பட்டதை தவறாமல் எடுத்துரைக்கக்கூடிய நபர்தான் தோழர் பட்டாபி.

எந்த சங்கத்துக்காரர்கள் வந்தாலும் வடசென்னை அலுவலகத்தில் உட்கார்ந்து பேச எழுதப்படாத அனுமதியை தோழர் பட்டாபியும் மற்ற வடசென்னை நிர்வாகிகளும் கொடுத்திருந்தாலும் அங்கே இருக்கும் ஆறு நாற்காலிகளில் ஒரு நாற்காலியாக பட்டாபி இருப்பார். தோழர்கள் வெற்றிராஜன், அன்பரசு போன்ற தோழர்களுக்குப் பின்னர் வடசென்னை அலுவலகத்தை உயிர்ப்பாக வைத்திருந்த பெருமை தோழர் பட்டாபிக்கு உரியது.

புயல் வேகத்திற்கிணையான செயல்வேகத்தைக் கொண்ட தோழர் பட்டாபிக்கு இவ்வளவு சீக்கிரம் 58 வயது வந்து முடிந்துவிட்டதை நம்பமுடியவில்லை. சங்க வேலைகளை துடிப்பாக செய்தால் ஆரோக்கியத்திற்கென்று தனியாக நேரம் செலவழிக்கத் தேவையில்லை என்பதற்கு தோழர் பட்டாபி ஒரு நல்லுதாரணம். கடுமையாக சங்க வேலைகள் செய்பவர்கள் துடிப்பாக அவற்றை எப்படி செய்ய வேண்டும் என்று தோழர் பட்டாபியிடம் கேட்டுத் தெளிவு பெறலாம். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகியாக செயல்படக்கூடிய அனைத்து தகுதிகளும் இருந்தும் இவர் மாநில பொறுப்புக்கு வராததும், அதை அவர் ஒரு பொருட்டாக நினைக்காமல் தனக்களிக்கப்பட்ட பொறுப்பில் இருந்து கொண்டே சிறப்பான சங்கப் பணியாற்றியதும் தோழர்கள் அனைவரும் மறக்காமல் கடைபிடிக்க வேண்டிய பண்பாகும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தின் ஒவ்வொரு செங்கல்லுக்கும் தோழர் பட்டாபிக்கும் உள்ள பரிச்சயங்களை அவ்வளவு சீக்கிரத்தில் யாரும் வெட்டித்தள்ளிவிட முடியாது. வடசென்னை அலுவலகத்தின் மேசைகளிலும், நாற்காலிகளிலும், அலுமினியத் தடுப்புகளிலும் வீசும் தோழர் பட்டாபியின் தோழமை வாசம் அவர் போன்ற துடிப்பான தோழர்களை நிச்சயம் கவர்ந்திழுத்து வரும் என்று கர்வத்தோடு சொல்லலாம். சொத்துக்களுக்கு ‘ஏ’ ரிஜிஸ்டர் ‘பி’ ரிஜிஸ்டர் என்று இருப்பது போல பட்டாக்களுக்கும் பதிவேடுகள் இருக்குமாயின் அதில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் பட்டா-‘பி’ சொத்தாக தோழர் பட்டாபி நிச்சயம் இருப்பார்.

– ஜிஜி



# ஆன்மீக அரசியலும் பகுத்தறிவு பகலவனும்

இங்கே ஆன்மீக நடத்துவதாக கூறுபவர்கள் கூட பெரியாரை துணைக்கு அழைக்காமல் தங்கள் பிழைப்பை நடத்த முடியவில்லை என்பதற்கு சமீபத்திய உதாரணம் நடிகர் ரஜினிகாந்தின் பேச்சு. தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவால் பாதை போட்டு சமத்துவ சமுதாயத்தை உருவாக்க பெரிதும் துணை நின்ற அரசியல் கலப்பில்லாத ஒரு தலைவரின் அரிய செயல்கள் பல இருக்கும் போது, ஆதாரமற்ற ஒரு செய்தியைக் கூறி ஆதாயம் தேட முயற்சிக்கும் ரஜினிகாந்த் போன்ற வர்கள், பெரியாரின் வாழ்க்கை சரித்திரத்தை படித்துவிட்டு இனி பேசட்டும். நூறு ஆண்டு களுக்கு முன்பே ஜாதி மறுப்பு திருமணத்தையும் சமபந்தி உணவு பழக்கத்தையும் துணிந்து நடத்திக் காட்டிய பெரியாரின் துணிவு எத்தகையது என்பதற்கு இந்தக் கட்டுரை ஒரு சிறிய உதாரணம் மட்டுமே.

## 100 ஆண்டுகளுக்கு முன்னால் ஈரோடு கண்ட ஆடம்பர ஜாதி மறுப்பு திருமணம் சமபந்தி உணவு

ஜாதி ஒழிப்பு பற்றி தந்தை பெரியார் வெறும் வாய்ப்பேச்சு வீரராக வாழாமல், ஒரு நூற்றாண்டுக்கு முன்பே அதாவது 1902-1904 காலகட்டத்திலேயே ஒரு ஜாதி மறுப்பு - "கலப்பு திருமணத்தை தன்னுடைய மண்டியில் வேலை பார்த்த ஒருவருக்கு அவரே முன்னின்று, வெகு ஆடம்பரமாக நடத்தி வைத்து முன்மாதிரியாக, நெஞ்சில் நினைப்பதை - தாம் பிரச்சாரம் செய்த கருத்தை செயலில் நடத்திக்காட்டி, ஈரோட்டை அதிர்ச்சியால் குலுங்கச் செய்துள்ளார்கள்.

இன்றைய காலகட்டத்தில் 21ஆம் நூற்றாண்டில் கூட ஜாதி பார்த்து திருமணம் செய்து கொள்ளும் பழைமையும் மூடநம்பிக்கையும் அழியாமல் பாதுகாக்கப்படும் நிலை உள்ளபோது ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தானே தன் ஏற்பாட்டில் எப்படி ஒரு திருமணத்தை நடத்தி வைத்துள்ளார் என்பதை தந்தை பெரியார் எழுத்துகளிலேயே பார்ப்போமா?

நெருஞ்சிப்பேட்டை சாமியார் விவகாரத்தில் செய்யாத குற்றத்திற்காக தன் தந்தையிடம் செருப்படியையும், அவரது காறித் துப்பல் எச்சிலையும் தண்டனையாக பெற்ற பெரியார், அதனால் தனது கொள்கை உறுதி பலவீனமாகி விடாமல் மேலும் பலப்பட்டது எப்படி என்பதை அவரே 'சுயசரிதை' நூலில் விளக்குகிறார்.

".....இந்தச் சம்பவம் பிரபலப்பட்ட சந்தர்ப்பத் தில், என் கடைக்கு பராரியாய் ஒரு வாலிபன் வந்து வேலை கேட்டான். அவன் மேட்டுப்பாளையத்தில் ஒரு சாயபு கடையில் குமாஸ்தாவாக இருந்ததாக சொன்னான். அவனுக்கு உடனே நான், வண்டிச் சரக்கு விலை போடும் வேலை கொடுத்து, பிறகு கணக்கு வேலை கொடுத்தேன். சிறிது காலம் பொறுத்து அவன் கல்யாணத்தை பற்றி அவன் தாயார் என்னை வந்து கேட்டார்கள். பெண் எங்கே? என்றேன். பெண்ணும் நீங்கள்தான் பார்த்து செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். உடனே நான் யோசித்தேன். ஒரு தாலுக்கா சேவகம் நாயுடு வீட்டில் அவர் வைப்பாக வைத்துக் கொண் டிருந்த மனைவிக்கு ஒரு மகள் இருந்தது. என் குமாஸ்தா ஒரு வேளாள வகுப்பு என்றாலும் இதை கட்டிக்கொள்ள கேட்டேன், சம்மதித்தார். தாலுகா சேவகன் மனைவியும் கொடுக்க சம்மதித்தார். கலப்பு மணம் என்கிற பெயரில் 'சதுர், பாட்டுக் கச்சேரி, பல்லக்கு ஊர்வலம்' என்கிற தடபுடலில் அத்திருமணம் நடந்தது. காரணம், திருமணத்திற்கு கடைகளில் பணம் வசூல் செய்தேன். 'சமபந்தி சாப்பாடு' விருந்து நடந்தது. ஊர் புராவும் கலந்து கொண்டது. இது 'ஜாதி பேதம் நீக்கல், சமபந்தி உணவு, கலப்பு ஜாதி திருமணம்' மூன்றும் கூடியதால் என் வயதொத்த முதலாளி பிள்ளைகள், குமாஸ் தாக்கள், எனது வாலிப சினேகிதர்கள் ஆகிய வர்கள் மனதில் பெரிய மாறுதல், சீர்திருத்த உணர்ச்சியை ஏற்படுத்தி, காரியத்தில் நடக்கும் படியும் செய்துவிட்டது. எப்போது என்றால், இன்றைக்கு 40, 45 வருடங்களுக்கு முன்னால் - அதுவும் பணக்கார வைதீக குடும்பத்தில் இருக்கின்ற என்னால் என்றால், இது உண்மையில் மிக அதிகமானதே... அந்தக் காலத்திற்கு"

சுயமரியாதை திருமணம் என்று அதிகாரப் பூர்வமாக அறிவிப்பதற்கு வெகுகாலம் முன்பாகவே தந்தை பெரியார் அவர்கள் தானே முன்னின்று ஜாதி மதம் நீக்கல், சமபந்தி உணவு, கலப்பு ஜாதி மணம் என்று மூன்று முக்கிய கொள்கைகளும் கூடிய திருமணத்தை நடத்தி ஈரோட்டுப் பாதைக்கு அன்றே எப்படி கால்கோள் விழா நடத்தினார் பார்த்தீர்களா?

எளிமை, சிக்கனம் என்பதையே தனது இயல்பாகக் கொண்ட தந்தை பெரியார் ஏன் அவ்வளவு ஆடம்பரத் திருமணமாக, ஈரோடு நகரமே அந்தக் காலத்தில் பல நாள் பேசும் திருமணமாக, சதுர் கச்சேரி, பாட்டுக் கச்சேரி, பல்லக்கு ஊர்வலம் என்ற 'தடபுடல்' திருமணமாக நடத்தினார் என்றால், அதன் மூலம் அவரது வாலிப நண்பர்களின் மனதில் ஒரு பெரிய மனமாற்றத்தையும் - ஜாதி ஒழிப்பையும், சீர்திருத்தத்தையும் - ஏற்படுத்தும் வேலையை அந்த ஆடம்பரம் செய்யும் என்ற திட்டத்தினால்தான் என்பது சிந்திக்கத்தக்கது.

# புதிய மாவட்டக் குழுக்கள் உதயம்
## புதிய மாவட்ட நிர்வாகிகளுக்கு வாழ்த்துகள்!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட பொதுக்குழு கூட்டம் 04.01.2020 அன்று மாவட்டத் தலைவர் க.சரவணன் தலைமையில் விழுப்புரத்தில் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.சிவகுமார் வரவேற்றார். சி.பாண்டுரங்கன், எஸ்.கே.பார்த்தசாரதி, ஏ.பக்கிரிசாமி, சிஐடியுவின் ஆர்.மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில செயலாளர் இரா.ந.நம்பி ராஜன் சிறப்புரையாற்றினார். கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டங்களுக்கு புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

### விழுப்புரம் மாவட்டம்

மாவட்ட தலைவராக ஜெ.ஜெயசங்கர், மாவட்ட செயலாளராக எஸ்.சிவகுமார், மாவட்ட பொருளாளராக கு.சரவணன், மாவட்ட துணைத் தலைவர்களாக ஏ.ஜெ.பார்த்தீபன், வீ.நடராஜன், ஆர்.சங்கரலிங்கம், எஸ்தேசிங்கு, மாவட்ட இணைச் செயலாளர்களாக ஜி.ஏ.அசோகன், கி.அபிராமி, மோகன்ராஜ், ஜி.அன்பழகன், மாவட்ட மகளிர் குழு அமைப்பாளராக தி.ஜெயந்தி ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்தெடுக்கப்பட்டனர்.

### கள்ளக்குறிச்சி

மாவட்ட தலைவராக எல்.அனந்தகிருஷ்ணன், மாவட்ட செயலாளராக கு.மகாலிங்கம், மாவட்ட பொருளாளராக பா.ரவி, மாவட்ட துணைத் தலைவர்களாக க.சரவணன், ஏ. ஏகாம்பரம், கே.செந்தில் முருகன், வீரபுத்திரன், மாவட்ட இணைச் செயலாளர்களாக எம்.ராஜேந்திரன், எ.சாமிதுரை, ஏ.வேலு, கே.வி.பாலசுப்ர மணியன், மாவட்ட மகளிர் அமைப்பாளராக ஜி.சாவித்திரி உள்ளிட்டோர் தேர்வு செய்யப் பட்டனர். ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர் என்ற முறையில் கு.மகாலிங்கம் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் மாவட்ட இணை செயலாளர் எஸ்.தேசிங்கு நன்றி கூறினார்.

★★★

காஞ்சிபுரம் மாவட்ட சிறப்பு பேரவை 01-02-2020 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது

மாவட்ட சிறப்பு பேரவை மாவட்ட தலைவர் வெ.லெனின் தலைமையில் மாவட்ட இணைச் செயலாளர் வே. குமார் வரவேற்புரை ஆற்றினார். சிறப்புப் பேரவையில் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஒய்வூதியர் சங்கத்தின் வெ.தென்னரசு வாழ்த்துரை வழங்கினார். மாவட்ட செயலாளர் சா.முகமது உசேன் விளக்கவுரை ஆற்றினார். இதில் காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகிகள் முன்மொழிவு வைக்கப்பட்டது.

### காஞ்சிபுரம் மாவட்டம் நிர்வாகிகள்

மாவட்ட தலைவராக வெ.லெனின், மாவட்ட துணை தலைவர்களாக சிவ.தினகரன், கே.ராஜ குமார், டி. ஜெயக்குமார், என். ஜெய்சுந்தர், மாவட்ட செயலாளராக துரை.மருதன், மாவட்ட இணைச் செயலாளர்களர்களாக எஸ்.ரஞ்சிட்சிங், ஜி.தயாளன், பு.நாகராஜன், தி.சுமதி, மாவட்ட பொருளாளராக வே. குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.


### செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகிகள்

மாவட்ட தலைவராக சா.முகமது உசேன், மாவட்ட துணை தலைவர்களாக ஆ.சுகுமாறன், எஸ் பரணி, ஆர்.கோவிந்தன், கே.பூங்குழலி, மாவட்ட செயலாளராக மு.தாமோதரன், மாவட்ட இணைச் செயலாளர்களாக அ.பேபி, டி.கன்னியப்பன், வே.விக்டர் சுரேஷ் குமார், எஸ். புஷ்பலதா, மாவட்ட பொருளாளராக எம்.என்.ஸ்ரீராம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் மு.தாமோதரன், காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் துரை.மருதன் ஆகியோர் ஏற்புரையாற்றினர். மாநில செயலாளர் தெ.வாசுகி நிறைவுரை யாற்றினர். காஞ்சிபுரம் வட்டக்கிளை தலைவர் வி.வேலரசு நன்றி கூறினார்.

❖

# பரிணாமக் கோட்பாட்டின் தந்தை

# சார்லஸ் டார்வின்



**சா**ர்லஸ் டார்வினின் 211 வது பிறந்த தினம் பிப்ரவரி 12 ம் நாள். அவர் தோன்றி 210 ஆண்டுகள் ஆகின்றன. அவர் பிறந்த போது , அந்த 19ம் நூற்றாண்டில் தான் ஏராளமான அறிவியல் கண்டுபிடிப்புகளும்,, சில புரட்சிகர அறிவியல் மாற்றங்களும் நடைபெற்றன. அதில் முக்கியமான ஒன்றுதான் உயிரியலில், அதிலும், மனிதனின் வரலாற்றுப் பாத்திரத்தில் , மனிதன் மற்றும் உயிரிகளின் முன்னோடி யார் என்பதுதான் அது. அதுதான் பரிணாமம் என்பதும் கூட..

அந்த பரிணாமத்தின் அறிவியலில் பிறந்த தகவலும், உண்மையுமான ஒரு அம்சம்தான் மனித இனம் குரங்கு போன்ற இனத்திலிருந்து உருவானது என்பதே. அந்தக் கருத்தை, பல புதை படிமச் சான்றுகளுடனும், உயிர்ச்சான்றுகளுட னும் நிரூபணம் செய்த விஞ்ஞானிதான் சார்லஸ் டார்வின்.

சார்லஸ் சிறுவனாக இருந்தபோது, அவர் பள்ளிக்குச் செல்லாமல், பெரும்பாலும் ஊர் சுற்றப் போய்விடுவார். கட்டிலுக்கு அடியில் பல எலிக்குஞ்சுகளை வளர்த்தார். தட்டான்,, மண் புழுக்கள், பட்டாம்பூச்சி, வண்டுகள், அணில்கள், புறாக்கள் என பல விலங்குகளுடன் தன பொழுதைக் கழிப்பார். விலங்குகளிடம் அன்பாக இருப்பார். இதனால் தந்தைக்கு சார்லசின் மேல் ஏகக் கோபம். "உனக்குப் படிக்கவே பிடிக்கலை; படிப்பும் ஏறல; நாய் பின்னாடி ஓடுறது; எலி பிடிக்கிறது இதுதான் உனக்குபிடிச்சது. உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். இதனால் நம்ம குடும்ப மானமே போகுது!" எனத் தன் மகனை கடித்து கொள்வார் தந்தை. தந்தைக்கு பின்னாளில் தன் மகன் பெரிய விஞ்ஞானியாகப் போகிறான்.. உலக சரித்திரத்தில் நீங்கா இடம் பெறப் போகிறான் என்பது தெரியவில்லை.

18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் உலகின் அனைத்து அம்சங்களிலும் மதத்தின் கையே ஓங்கி இருந்தது. அனைத்தும் மதத்தின் கட்டுப் பாட்டிலேயே இருந்தன.. அனைத்து தகவல்களும் பதிவுகளும், கண்டுபிடிப்புகளும், செயல் பாடுகளும் ஊர்த்திருவிழாக்களும் மதத்தைச் சார்ந்தே, அவர்களின் ஒப்புதலின் பேரிலேயே நடைபெற்றன. அரசும் கூட மதவாதிகளின் கைக்குள்தான். அதனால்தான் கலீலியோ பூமி சூரியனைச் சுற்றுகிறது என்று சொன்ன போது, மதவாதிகள் அதிர்ச்சியுற்று, கோபப்பட்டு, கடவுள் உருவாக்கிய மனிதன் உள்ள பூமி சூரியனைச் சுற்றுவதா, அது ஒரு போதும் இருக்காது, நடக்கவே நடக்காது என்றும் நினைத்தனர். எனவேதான், கலீலியோ அதன் அடிப்படையில் அரச நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டார்; தண்டிக்கப்பட்டார்.. கலீலியோ, பூமி சூரியனைச் சுற்றுகிறது என்று சொன்னது கடவுள் மறுப்புச் செயல் கடவுள் நிந்தனை என்று சொல்லப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டு வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு அங்கேயே வாடினார்.

பூமிக்கே இப்படி என்றால் பூமியில், கடவுள் படைத்த அற்புத உருவம் மனிதன் மட்டுமே. அவன்தான் கடவுளின் படைப்பில் உயர்ந்தவன் என்றும் சொல்லப்பட்டது. இந்த நிலையில், மனிதன் குரங்கு போன்ற இனத்திலிருந்து உருவானது என்றால், மதவாதிகள், தேவாலய மக்கள் இவரை நடு ரோட்டில் நிற்கவைத்தே சுட்டுவிடுவார்கள். ஆனாலும் கடலில் பல மாதங்கள் பயணம் செய்து, ஆங்காங்கே, பல உயிர்களையும், விலங்குகளையும் சேகரித்து ,ஒப்பிட்டு, அவற்றின் உடல் உள்ளுறுப்புகளை ஆராய்ந்து அதன் பின்னரே, 'உயிர்களின் தோற்றம்' என்ற நூலை எழுதினர் சார்லஸ் டார்வின்.. "உயிர்களின் தோற்றம்" புத்தகம் வெளியான போது, அது ஒரு பரபரப்பான வெற்றியையும் பெற்றுத் தந்தது. மனித இனம் குரங்கு இனத்தோடு தொடர்பு கொண்டது என்று இவர் அஞ்சாமல் கூறிய கருத்துக்கள், அன்று இவரைப் பலர் எள்ளி நகையாட வைத்தது. எனினும், இவருடைய கருத்துக்கள் இன்று அறிவியல் உலகில் பெருமதிப்புடையவை.

சார்லஸ் டார்வின் தமது 22ஆம் வயதில் இறையியலில் (Theology) பட்டம் பெற்றார். ஆனால் கிறித்தவத் திருச்சபையில் உறுப்பினராகச் சேர மறுத்துவிட்டார். அப்போது அதே பல்கலைக்கழகத்தில் தாவரவியல் துறையில் பேராசிரியராக இருந்த ஜான் ஹென்ஸ்லோ என்பவரிடம் நெருங்கிய நட்பு கொண்டார் டார்வின். அவர் மூலமாக கேப்டன் ராபர்ட் பிட்ஸ்ராய் என்பவரின் நட்பு கிட்டியது. தென்அமெரிக்க கடலோரப் பகுதிகளில் ஆய்வு செய்ய கப்பல் புறப்படவிருந்தது. கேப்டன் ராபர்ட் பிட்ஸ்ராயின் தலைமையில் செல்லவிருந்த அந்தப் பயணத்தில் கலந்துகொள்ளுமாறு டார்வினுக்கு அழைப்பு வந்தது. அதனை ஏற்றுக்கொண்டு 1831-ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் தேதி கேப்டன் பிட்ஸ்ராயும், டார்வினும் பயணத்தைத் தொடங்கினர். இரண்டாண்டுகளில் திரும்புவது என்ற முடிவோடு தங்கள் பயணத்தினைத் தொடங்கினர். ஆனால் ஐந்து ஆண்டுகள் நீடித்த அந்த வரலாற்று சிறப்புவாய்ந்த பயணம்தான் “பரிணாம வளர்ச்சிக் கொள்கை” உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. அந்தப் பயணத்தைத் தொடங்கிய போது டார்வினுக்கு வயது 22.

ஐந்து ஆண்டுகளில் இடரும் இன்னலும் மிகுந்த கடற்பயணத்தைச் சார்லஸ் டார்வின் மிகுந்த துணிச்சலுடன் மேற்கொண்டார். பயணத் துன்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தற்போது காணக்கிடைக்காத பல உயிரினங்களின் எலும்புகளை ஏராளமாகச் சேகரித்தார். ஊர்வன, பறப்பன, நடப்பன என்று எல்லா உயிரினங்களின் வாழ்க்கையும் இடத்துக்கிடம் ஒற்றுமையும், வேற்றுமையும் கொண்டிருப்பதைக்கண்டு டார்வின் வியப்படைந்தார். இத்தகைய ஒற்றுமை, வேற்றுமைகளைப் புரிந்துகொள்ள உயிரினங்கள் அனைத்தும் பொதுவான மூதாதையர்களின் வழித்தோன்றல்களா என்பதையும், மேலும் அவை தொடர்ச்சியான சிறு, சிறு மாற்றங் களோடு இன்றைய வளர்ச்சியைப் பெற்றுள்ள னவா என்பதையும் தெரிந்து கொள்வது இன்றி யமையாதது என்று அவருக்குத் தோன்றியது.

“உயிரினங்களில், மாற்றங்கள் எப்படி, ஏன் ஏற்படுகின்றன?” என்ற வினாவிற்கு விடை காணும் ஆர்வம் டார்வினுக்கு ஏற்பட்டது. இந்நாளில் காணவியலாத, மறைந்துவிட்ட உயிரினங்களையும், மற்றும் இப்போது உயிரோடிருக்கிற உயிரினங்களையும் அவற்றின் எலும்புகளின் துணைகொண்டு ஆய்வு செய்யும் முயற்சியில் டார்வின் ஈடுபட்டார். தான் சேகரித்த சில எலும்புகளுக்கு சொந்தமான விலங்குகள் முற்றாக அழிந்து போயிருக்கும் என்று முதலில் யூகித்தார். ஆனால் பின்னர் அந்த விலங்குகளி லிருந்துதான் தற்போதைய சிறிய அளவிலான விலங்குகள் தோன்றியிருக்க வேண்டும் என்றும் கருதினார். கலபோகஸ் தீவுகளில், புதிய வகையான பறவைகள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றைக் கண்டு அதிசயப்பட்டார். அந்த ஆய்வின் பயனாக “பரிணாம வளர்ச்சிக் கொள்கை” முடிவுக்கு அவர் வந்தார். இப்படி பல்வேறு ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, டார்வின் 1836ஆம் ஆண்டு இங்கிலாந்து திரும்பினார். அமெரிக்கக் கடலோரப் பகுதி மற்றும் ஐரோப்பியத் தீவுகளில் பயணத்தை முடித்துக் கொண்டு வந்த டார்வின் ஐந்து ஆண்டுகளில் தான் சேகரித்த விபரங்களையும்,தமது கண்டுபிடிப்பு களையும் ஆய்வுக்கட்டுரையாக எழுதி 'The voyage of the Beagle' என்ற நூலை லண்டனில் வெளியிட்டார்

1858ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள், டார்வினின் கண்டுபிடிப்புகளும், அவரது நண்பர் வாலஸின் கட்டுரையும் லண்டன் லின்னன் கழகத்தில் வாசிக்கப்பட்டன. பீகிள் பயணத்தில் சேகரித்த ஆய்வு செய்ததன் பயனாக டார்வினுக்குத் தோன்றியதே ‘பரிணாம வளர்ச்சிக் கொள்கை’ ஆகும். 1859ஆம் ஆண்டு இக்கொள்கையை, டார்வின் உலகை வியப்பில் ஆழ்த்திய ஒரு புத்தகம் மூலம் வெளியிட்டார். ‘இயற்கைத் தேர்வு மூலமாக உயிரினங்களின் தோற்றம்’ என்ற அந்த புத்தகம் கூறிய கொள்கைதான் பரிணாம வளர்ச்சிக் கொள்கை. அதன்படி உயிரினங்களின் வாழ்க்கைப் போராட் டத்தில் தகுதியும், வலிமையும் உள்ளவை நிலைத்து நிற்கும். மற்றவை அழிந்துபோகும். இதுபுதிய இனங்களின் உருவாக்கத்திற்கு வழியேற்படுத்தும் என்றும் கண்டறிந்து கூறினார் டார்வின். இக்கருத்துகளின் அடிப்படையிலேயே உயிரினங்களில் தொடர்ந்து மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

சார்லஸ் டார்வின், தனது புத்தகம் ’உயிரிகளின் தோற்றம்’ வெளிவரும் முன்பு சுமார் 20 ஆண்டுக்காலம் மௌனமாக இருந்தார். டார்வின் உயிரிகளின் தோற்றம் பற்றி அவர் எழுதப் போவதாக சொன்னதுமே, அவரைச் சுற்றி உள்ளவர்கள் அவர் என்னவோ ஒரு கொலைக்குத்

தான் ஒப்புதல் வாக்குமூலம் தரப்போவது போல, அவரை ரொம்பவும் கேலியும், கெக்

நையாண்டியும் செய்தனர்.. எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு, இதுவரை யாரும் செய்யாதது.. உலகைப் புரட்டிப் போட்ட, யாரும் நம்பவே முடியாத ஒன்றைக் கண்டுபிடித்தத்திற்கு, உயிரிகளின் மிக அடிப்படையான ஆதாரத்தை, ஆதாரங்களோடு, உண்மையை வெளிப்படுத்து வதற்கு, ஒரு தனி மனிதன் தன் வாழ்க்கையில், ஏராளமான போராட்டங்களையும் சிரமங் களையும் சந்திக்க வேண்டியிருந்தது என்பதுதான் உண்மை.

பரிணாமக் கொள்கையைக் கேட்டு உலகமே ஸ்தம்பித்தது. பலர் ஏற்றுக்கொண்டனர். பல மதவாதிகள் இவரைக் குரங்கு என சித்தரித் தார்கள். பல இடங்களில் குரங்கு என்றும், நரகத்துக்குதான் போவார் என்றும் சொன்னார்கள். அவரின் பிறந்தநாளைப 'பேய் தினம்' என்று வேறு அறிவித்தார்கள். காரல் மார்க்ஸ் தன்னுடைய நூலை டார்வினுக்கு சமர்ப்பித்தார். கடவுளின் முதல் எதிரி என்று டார்வினின் நூலைத் தூற்றினார்கள்.

உயிர்களின் தோற்றம் என்ற புத்தகத்தின் முழுப்பெயர் : "On the Origin of Species by Means of Natural Selection, or the Preservation of Favoured Races in the Struggle for Life" இந்த புத்தகம் முதன் முதல் 1859ஆம் ஆண்டு, நவம்பர் 24ஆம் நாள் மதியம் 1.00 மணிக்கு வெளியானது. அப்போது அது வெளியான அன்றே அதன் 1250 பிரதிகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன.. இதில் ஆச்சரியப்படவேண்டிய அம்சம், என்னவென் றால், யாரெல்லாம் டார்வினை, இவர் குரங்கு, இவர் அப்பா குரங்கு, இவரின் மூதாதையர் குரங்கு என்றெல்லாம், திட்டி, அவரைப்பற்றி, டார்வின் தலையையும், குரங்கு உடலையும் சேர்த்து கேலி சித்திரமும் போட்டார்களோ, அவர்களும், மத குருமார்களும் தான், டார்வின் அப்படி என்னதான் எழுதி இருக்கிறார் என்பதை அறிய எல்லா புத்தகங்களையும் வாங்கி விட்டனர். ஆனால் டார்வினின் கருத்துகள் அறிவியல் உலகை வேரோடு அசைத்தது. அவரின் கருத்துகள் வணிக உலகிலும் உலவின. சமுதாயத்திலும் பல மாற்றங்களை உண்டுபண்ண அவரின் கருத்துக்கள் உதவின.

உயிர்களை எல்லாம் ஒரே நாளில்தான் ஆண்டவன் உருவாக்கினார் என்று உலகின் அனைத்து மதங்களும் போதித்து வந்தன. அந்தக் கருத்தினை , டார்வினின் புத்தகம் அடித்து நொறுக்கி, தூள் தூளாக்கி தவிடுபொடியாக்கியது என்பதால் அனைத்து மதவாதிகளும் கொதித்துக் கொந்தளித்து டார்வினை உண்டு இல்லை என்று ஆக்கிவிடத் துடித்தனர். ஆனால் டார்வின் அமைதியாக தன் உயிரின சேகரிப்பால், அவற்றின் விளக்கத்தால், அவர்களுக்கும், அவைகளுக்கான விளக்கமும் தர முடிந்தது. உயிரினங்கள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்ற மடைந்து, சின்ன உயிரிகளிலிருந்து பெரிய உயிரியாக மாற , ஒவ்வொரு விலங்கினமாக மாறி மாறி, இன்றைய உருவத்துக்கு வந்திருக்கின்றன என்பதையும் தெளிவாக ஆதாரத்துடன் தெரிவித் தார். எதுவும் ஒரே நாளில் படைக்கப்பட்டதல்ல என்பதை தன் ஆராய்ச்சியின் மூலம் பல்வேறு ஆதாரங்களுடன் விளக்கினார் டார்வின். இதனால் மதவாதிகளுக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லை. அனைவரும் கொதித்துக் கிடந்தனர்.

கி.பி. 1860ஆம் ஆண்டு ஜுன் மாதம். இங்கிலாந்து, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக வளாகம் மக்கள் வெள்ளத்தால் ததும்பி வழிகிறது. வெளி நாடுகளிலிருந்து வருந்திருந்த விஞ்ஞானிகள் எல்லாம் என்னதான் நடக்கப் போகிறது என்ற ஆர்வத்தில் ஒருவருடன் ஒருவர் கிசுகிசுத்தவாறு இருக்கின்றனர். உடன் அமர்ந் திருக்கும் பிரபு வர்க்கத்தினர்கள் நடைபெற இருக்கும் மாபெரும் விவாதப் போரைப் பற்றி ஆரவாரத்துடன் பேசிக் கொண்டிருகின்றனர். இதற்கிடையில் மக்கள் கூட்டத்தாலும் ஆக்ஸ் போர்டு வளாகம் அதிர்ந்து கொண்டிருந்தது.

ஆக்ஸ்போர்டின் கலகலப்பிற்கு காரணம் உண்டு, அதன் காரணம் என்ன தெரியுமா? டார்வின் வெளியிட்ட, வெறும் 230 பக்கங்கள் மட்டுமே கொண்ட, உலகைப் புரட்டிப் போட்ட, அந்தக் குட்டிப் புத்தகம் தான்.. உயிரினங்களின் தோற்றம்தான். இந்தக் குட்டி புத்தகம் ஏற்படுத்திய சூறாவளியில் விவிலியமும் பறந்தே போய் விட்டது. இறைவனின் மறைவாக்கு கேள்விக்கு உள்ளாக்கப்படுவதை கிறித்தவ பாதிரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். அவர்களால் பொறுக்க முடியவில்லை. கடவுள் உருவாகிய மனித இனம் எப்படி குரங்கு போன்ற இனத்தி லிருந்து வந்திருக்க முடியும்.. இந்த மதவாதி களின் கூச்சல், குழப்பம், சச்சரவைக் கண்டு, அவர்களை பொதுமேடையில் விவாதத்திற்குத் தயாரா என்று டார்வினின் ஆதரவாளர்களுக்குச் சவால் விட்டனர்.

மதத்தின் பிடியிலிருந்து அறிவியலை மீட்கும் கடமையுணர்வுடன் ஆக்ஸ்போர்டு விவாதத்திற்கு வருகை தந்தனர் டார்வினின் ஆதரவாளர்களான ஹக்ஸ்லியும், ஹூக்கரும். அறிவின் அடக்கத் துடன் அமர்ந்திருந்த இவ்வறிஞர்களின் எதிரில் ஆக்ஸ்போர்டு மதத்துறையின் பிரபலமான மதகுரு பிஷப் வில்பர் போர்ஸ் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து வீற்றிருந்தார். அவரைச் சுற்றி வெண் தூண்களாய் ஆண்டவனடியார்கள் மூளையைச் சாணை பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தனர். விவாதம் தொடங்கியது.

வேத நூலை முத்தமிட்டு, சிலுவை ஏந்திய கரங்களுடன் தொண்டையைக் கனைத்துவிட்டு பேச ஆரம்பித்தார் பிஷப், "மக்களே! பரமபிதா வின் பெயரால் உங்களை வேண்டுகிறேன். சாத்தானின் அவதாரமான சார்லஸ் டார்வின், நீங்களெல்லாம் குரங்கிலிருந்து தோன்றியவர்கள் என கூசாமல் கூறியிருக்கிறான். பாலூட்டி சீராட்டி வளர்த்த உங்கள் பாட்டன்மார்களும், முப்பாட்டன்மார்களும் குரங்குகளா? இதை ஏற்கப் போகிறீர்களா? எனது கேள்விக்கு இங்கு அமர்ந்திருக்கும் குரங்கின் சீடர்கள் என்ன பதில் தருவார்கள். இவர்கள் குரங்கிலிருந்து உதித்ததாகச் சொல்வது தன் பாட்டன் வழியாகவா, பாட்டி வழியாகவா" என்று கேலி செய்தார். இறுதியில் 'டார்வினின் ஆராய்ச்சி சத்திய மறைநூலின் புனிதக் கொள்கைக்கு எதிராக இருக்கிறது' என்று கூறினார்..

'புனித'க் கொள்கையால் உணர்வூட்டப்பட்ட மக்களின் கரவொலியின் நடுவில் பேச வந்தார் டார்வினின் சீடர் ஹக்ஸ்லி. வெறியூட்டப்பட்ட மத உணர்வுகளின் மத்தியில் உண்மையைப் பேசுவதற்கு ஒரு மனிதனுக்கு ஏராளமான துணிவு தேவை.. மதமெனும் இருட்டுக் குகைக்குள் இருக்கும் மக்களை அறிவியல் உண்மையெனும் ஒளியை நோக்கி ஈர்ப்பதற்காவே அனைத்து அவலங்களையும் சகித்துக்கொண்டார் ஹக்ஸ்லி. டார்வினின் ஆராய்ச்சியைப் பற்றி விரிவாக பேசினார். அங்கு வீற்றிருந்த மக்களில் ஒரு பகுதி மக்களையாவது உண்மையை ஒத்துக் கொள்ள வைக்க முடிந்ததே என்ற எண்ணத்தில் பேசினார் ஹக்ஸ்லி. பின்னர் பொது விவாதம் முடிந்தது.

ஆனால் டார்வின் எழுப்பிய அறிவியலின் புரட்சிப்புயல் ஓயவில்லை. குரங்குகளைக் கண்ட இடமெல்லாம் கல்லாலடித்து துரத்தினார்கள் மறை உணர்வு கொண்ட மக்கள்.. இங்கிலாந்தின் தேவாலயங்களில், கருப்பு உடை தரித்த விவிலிய பக்தர்கள் தங்களின் கால்களின் கீழ் டார்வினின் புத்தகத்தை மிதித்தவாறு இறைவனின் புனிதக் கொள்கையை சாத்தானாகிய டார்வினிடமிருந்து காப்பதாக உறுதி பூண்டார்கள். இதுதான் அன்றைய உலகில் நடந்த நிகழ்வு. ஆனால் இன்று மனித இனம் குரங்கின அமைப்பிலிருந்து தான் உருவானது என்றும், மனிதனுக்கும், டால்பினுக்குக்கும் கூட பொது முன்னோடிகள் உண்டு என்ற உண்மைகள் வெளிவந்து, அறிவியலின் தலை நிமிர்ந்த உண்மை கம்பீரமாக எழுந்து நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

உயிரிகளின் தோற்றத்தின் இரண்டாவது பதிப்பு 1860, ஜனவரி 7ம் நாள் வெளியானது. டார்வினின் வாழ்நாளில், இந்த புத்தகத்தின் 6 பதிப்புகள் வெளியாயின. முதல் அமெரிக்க பதிப்பும் 1860 களில்தான் வந்தது. இந்த புத்தகத்தின் மொழி யாக்கங்களும் வெளிவந்தன. ஆனால் அதிலுள்ள விளக்கங்களைச் சொல்வதற்குள் அவர்களுக்கு விழிபிதுங்கிப் போயிற்று. இதில் முக்கியமாக, பரிணாமக் கொள்கையில் கூறப்படும், "survival of the fittest" என்னும் சொல்லாடல் முதல் பதிப்பில் பயன்படுத்தப் படவே இல்லை. இந்த உருவாக்கியவர் ஹெபெர்ட் ஸ்பென்சர் (Herbert Spencer) என்ற தத்துவ ஆசான்தான்..

பொதுவாக நாம் பரிணாமத்தில் பேசும் '"தகுதியுள்ளவை தப்பிப் பிழைக்கும்"' ("survival of the fittest") என்ற பதங்கள் அடங்கிய மந்திரச்சொல் டார்வினின் முதல் பதிப்பில் வரவேயில்லை. 5ஆம் பதிப்பில்தான் வந்தது. மேலும், நாம் இப்போது பயன்படுத்தும் பரிணாமம் (Evolution) என்ற சொல்லும் முதல் பதிப்பில் இல்லை. 6ம் பதிப்பில்தான் இணைக்கப் பட்டது. ஏனெனில் இந்த வார்த்தைகள் கொஞ்சம் முரண்பட்டவை என டார்வின் கருதியதால், இவற்றை அவர் முதல் பதிப்பில் பயன்படுத்த வில்லை.

இது தவிர டார்வினுக்கு ஏராளமான விசித்திர குணங்களும், பழக்க வழக்கங்களும் உண்டு. ஆனால் பொதுவாக பரிணாமம் பற்றி பேசும் மக்கள் இவற்றைக் கையில் எடுப்பதில்லை. டார்வின் பொதுவாகவே, விலங்குகள் மீதும் மற்ற உயிரிகள் மேலும் பச்சாதாபமும், பரிவும் ஏராளமாய் உள்ளவர். அவரின் இந்த குணம் மனித இனம் வரை கூட நீட்டிற்று. அவர் எச்.எம்.எஸ். பீகிள் என்ற கப்பலில் பயணிக்கும் போது, அவரின் மனம் அடிமைகளுக்கு நடக்கும் கொடுமையைப் பற்றி சிந்தித்தது. அவர் அந்த

கப்பலை தென்னமெரிக்காவில் நிறுத்தினார். அங்கு நடைபெற்ற கொடுமைகளையும் கூட உயிர்களின் தோற்றம் புத்தகத்தில் அடிமை ஒழிப்பு பற்றிய தகவல்களையும் குறிப்பிடுகிறார்.

டார்வின் மருத்துவம் படிக்க முடியாத பின்னணியைப் பார்ப்போமா? அந்த காலத்தில், உணர்வு நீக்கி, அதாவது மயக்க மருந்து கண்டுபிடிக்கப்படாததால், மயக்க மருந்து கொடுக்காமலேயே, எல்லோரையும் கதற கதறவே அறுவை சிகிச்சை செய்வார்கள். அப்படி ஒரு சமயம், ஒரு சின்னக் குழந்தைக்கு நடந்த அறுவை சிகிச்சையைப் பார்க்க வேண்டிய சூழல் டார்வினுக்கு ஏற்பட்டது. அதைக் கண்ணுற்ற சார்லஸ் டார்வின் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்று கண்காணாமல் ஓடியே போய்விட்டார்! பொதுவாகவே புழு, பூச்சிகள், விலங்குகள் மேலிருந்த ஆர்வத்தை ஒட்டி, டார்வின் அவற்றை பின்னர் சேமித்தார்.. டார்வின் கேம்பிரிட்ஜ் பல்கலை கழகத்தில் சேர்ந்து, படிப்பில் சிறந்து விளங்கினார். உயிரினங்களின் தோற்றம் பற்றிய ஆய்வும் கூட தொடர்ந்து செய்து கொண்டே இருந்தார்.

டார்வினின் திருமணமும் கூட சொந்தத்தில் தான். டார்வின் தனது நெருங்கிய முதல் இரத்த சொந்தத்திதில் எம்மா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். டார்வின் எம்மா தமபதிக்கு 10 குழந்தைகள் பிறந்தன. 6 பையன்கள்; 4 பெண் குழந்தைகள். ஆனால் அவரின் செல்ல மகள் ஆன்னி டார்வினை அவளின் பத்தாவது வயதில் பறிகொடுத்ததால், அவருக்கு கடவுளின் மேல் நம்பிக்கை போனது. அவர்களின் 3 குழந்தைகள் இறந்து போயின.

தென் அமெரிக்காவிலுள்ள "ஜான் எட்வர்டொன்" என்ற அடிமை ஒருவரின் மூலமாக இறந்த உயிரினங்களை பதப்படுத்தும் கலையைக்கற்றுக் கொண்டார். உலகிலுள்ள சிறந்த அருங்காட்சியகம் மூலமாக, தாவரங்களை வகைப்படுத்தும் முறையையும் அறிந்து கொண்டார். .

சார்லஸ் டார்வின் தனது 21வது வயதில்தான் கப்பலில்பயணித்தார். அவரின் மூக்கு எப்போதும் HMS பீகிளின் முகப்பு போலவே இருப்பதால், அவருக்கு இது எப்போதுமே பிடிக்காது. HMS பீகிளின் மாலுமி, ராபர்ட் பிட்ஸ்ராய் (Robert FitzRoy) என்பவர் தென்னமேரிக்காவைச் சுற்றி ஒரு கணக்கெடுப்பு நடத்த விரும்பினார். ஆனால் தனியாகச் செல்ல கொஞ்சம் அச்சப்பட்டார். ஏனெனில் இதற்கு முந்தைய கப்பல் பயணத்தில் அதன் மாலுமி தற்கொலை செய்துகொண்டதால், பிட்ஸ்ராய்க்கு கொஞ்சம் பயம் ஏற்பட்டது. அவருக்குத் தெரிந்த பேராசிரியர்களைக் கேட்ட போது, அவர்கள் டார்வின் பெயரைக் குறிப்பிட் டனர். ஆனால் டார்வினுக்கு செல்ல இஷ்டம் இல்லை. ஏனெனில் அவரின் அப்பாவுக்கு இரண்டு ஆண்டுகள் மகனை கடலில் பயணிக்க வைக்க விருப்பம் இல்லை. மேலும் அதற்கு கொடுக்க பணமும் இல்லை. எனவே மறுத்து விட்டார். பின்னர் டார்வினின் மாமாவின் சிபாரிசின் பேரில் பிவிஷி பீகிள் கப்பலில் புறப்பட்டார்.

டார்வினின் கண்டுபிடிப்புகளைப் பற்றிய மற்ற நூல்கள் 'மனிதனின் மரபுவழி' மற்றும் 'தாவரங் களின் இடம்பெயர்த்திறன்' ஆகியனவாகும். மேலும் மண்ணின் வளத்திற்கும், பயிர் வளர்ப்புக் கும் முக்கிய காரணமாக விளங்குவது மண்ணில் வாழும் மண்புழுக்கள் என்பதையும் டார்வின் தெளிவுபடுத்தினார். அவருடைய நூலான "தாவர வளர்ச்சிக்குப் புழுக்களின் பங்கு" என்பது மண் ஆராய்ச்சியும், மண்புழுக்களின் ஆய்வும் ஒன்றோ டொன்று எவ்வளவு தொடர்புடையன என்பதை விளக்குவதாகும்.

மதத்துக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனச் சொன்ன அவர், கடவுளைப் பற்றிய எந்த விசாரணையிலும் ஈடுபடவில்லை. அரசு மரியாதையோடு நியூட்டனுக்கு அருகில் அடக்கம் செய்யப்பட்டார். உலகைக் கூர்ந்து கவனிப்பதையும், ஆராய்ச்சிகள் செய்வதையும் நிறுத்துமாறு எப்போது நான் நிர்பந்திக்கப்படு கிறேனோ அன்றைய தினமே நான் இறந்து போவேன்" எனச் சொன்ன அவர் இறக்கிற பொழுதும் மனைவியிடம் காதல் மொழி பேசினார். 'நீ என்னைக் கவனித்துக்கொள்வாய் என்றால், அதற்காகவே நான் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கத் தயார்' என்று சொல்லியபடியே அவரின் இறுதி மூச்சு அடங்கியது. சார்லஸ் டார்வின் 1882ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். இங்கிலாந்தின் வெஸ்ட் மினிஸ்டர் அப்பேயில் அவரது உடல் அடக்கம் 2 பெரிய விஞ்ஞானிகளான ஜான் ஹெர்ஸ்ஷல் மற்றும் சர் ஐசக் நியூட்டன் ஆகியோர் முன்னிலை யில் ஏப்ரல் 26 ல், மிகுந்த மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

(டார்வின் பிறந்தநாள் பிப்ரவரி 12)

- **பெரணமல்லூர் சேகரன்**

# அரசு ஊழியர்கள் அதிக ஊதியம் வாங்குகிறார்களா?

## தி இந்து தலையங்கம்

மிகவும் நன்றி தி இந்து நாளிதழில் வெளியான நடுநிலையான செய்திக்காக விளக்கமான உரை

அரசுப் பணியாளர்களில் உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் உரிமைகளும், ஊதியமும் அடிநிலை ஊழியர்களுக்குக் கிடைப்ப தில்லை. எனவே, கீழடுக்குகளில் உள்ளோர் போராடும்போது, அதிகார அமைப்புகள் அனைத்தும் அவர்களுக்கு எதிராகத் தங்களின் பிரச்சாரங்களை முடுக்கிவிடுகின்றன. அதன் மூலம் அந்த வாய்ப்புகூடக் கிடைக்காத இதர பகுதி மக்களை அவர்களுக்கு எதிராகத் திருப்பிவிடுவதில் வெற்றிபெற்றுவிடுகின்றன.

அரசு என்பது அமைச்சர்களும் உயர்மட்ட அதிகாரிகளும் மட்டுமல்ல; அரசின் எந்தவொரு திட்டத்தையும் அடிமட்டத்தில் செயலாக்குபவர்கள் ஊழியர்களே. கொள்கை வகுத்தலும், திட்டமிடுதலும், நிதி ஒதுக்குதலும் மட்டுமே அரசின் உயர்மட்டத்தில் நடைபெறுகின்றன. அமலப்படுத்தும் முழுச் சுமையும் ஊழியர்கள் தலையிலேயே சுமத்தப்படுகிறது. உதாரணமாக, சுகாதாரத் துறையில் பல்வேறு அடுக்குகள் இருந்தபோதும், இறுதியாக ஒரு பகுதியைச் சுகாதாரமாக வைத்திருப்பது அங்குள்ள குப்பைகளையும், சாக்கடைகளையும் அகற்றும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களே. அந்தப் பணியைச் செய்யவில்லை என்றால் திட்டமிடல், நிதி ஒதுக்குதல், கண்காணித்தல் என்கிற எந்த அடுக்கினாலும் பலன் இல்லை.

### ஊழியர்களின் எண்ணிக்கை

இந்தியாவில் ஏராளமான அரசு ஊழியர்கள் தேவையின்றி இருப்பது போன்ற பிரச்சாரங்கள் தொடர்ச்சியாகச் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு நாட்டின் மக்கள் தொகைக்கும் ஒவ்வொரு துறையிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதமே அந்த நாடு மேம்பட்ட சேவையை வழங்குகிறதா என்பதற்கான அளவுகோல். 2011-ம் ஆண்டு கணக்கின்படி இந்தியாவில் ஒரு லட்சம் பேரில் 1,622 அரசு ஊழியர்கள் பணி செய்கிறார்கள். இந்த எண்ணிக்கை தற்போது குறைந்திருக்கக் கூடும். 2011-ம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி அமெரிக்காவில் ஒரு லட்சம் பேரில் 7,681 பணியாளர்கள் சேவை செய்கின்றனர். மத்திய அரசுப் பணியாளர்களைப் பொறுத்தமட்டில் 2011-ம் ஆண்டு 24.63 லட்சம் பேர். மாநில அரசு ஊழியர்கள் 72.18 லட்சம் பேர். இந்த எண்ணிக்கையில் ரயில்வேயில் பணிபுரியும் 14 லட்சம் பேரும் அடங்குவர். அதாவது, ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 125 மத்திய அரசு ஊழியர்கள் மட்டுமே இருப்பார்கள்.

சமூக மாற்றத்தில் அரசின் சேவையை மக்களிடம் கொண்டு சேர்க்கும் திறன் மிக முக்கியமானது. கல்வி, மருத்துவம், சுகாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றம் ஏற்பட்ட நாடுகள் அல்லது மாநிலங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டால், அவற்றின் ஊழியர் விகிதம் அதிகமாகவே உள்ளது. தமிழ் நாட்டில் மொத்த மக்கள் தொகை ஏறத்தாழ 8 கோடி. தமிழகத்தில் உள்ள மாநில அரசு ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 12 லட்சம். அதாவது, ஒரு லட்சம் பேருக்கு வெறும் 1,500 ஊழியர்கள் மட்டும்தான்.

### 1லட்சம் மக்களுக்கு =1500 அரசு ஊழியர்கள்

நேரடியாக ஊழியர்களின் எண்ணிக்கை அதிகமானால் மாநிலங்களின் வளர்ச்சி, மனிதவளக் குறியீடு இவை உயர்ந்துவிடும் என்பதல்ல இதன் பொருள். அதேசமயம், இதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு என்பதை மறுக்க முடியாது. அரசின் அறிக்கைகள் பல நேரங்களில் மக்களைத் தூண்டும் வகையிலும், படித்த வர்களைக்கூடத் திசைதிருப்பும் வகையிலும் அமைந்து விடுகின்றன. குறிப்பாக,

போராட்டங்கள் நடைபெறும் போது கொடுக்கப்படும் புள்ளி விவரங்கள், போராடுபவர் களுக்கு எதிரான பகையையும், வன்மத்தையும் உருவாக்கும் நோக்கத்தோடு முன்வைக்கப் படுகின்றன.

## பொய்ப் பிரச்சாரம்

தமிழ்நாடு அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் 71% ஊழியர்களின் சம்பளத்துக்கே கொடுக்கப்படுகிறது என்கிற தோற்றத்தை உருவாக்குகிறது அரசு. உண்மையில், இந்தத் தொகை 50%-க்கும் குறை வாகும். 7-வது ஊதியக் குழு குறைந்தபட்ச சம்பளம் ரூ.18,000-மாவது இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளது. 10 ஆண்டு களுக்குப் பிறகு 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதியன்று அரசு ஊழியர்களின் சம்பளம் மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. அப்போது முதல்வர் பழனிசாமி புதிய சம்பள விகிதத்தின்படி குறைந்த பட்ச ஊதியம் ரூ. 6,000-த்திலிருந்து ரூ. 15,700 ஆகவும், அதிகபட்ச ஊதியம் ரூ.77,000-லிருந்து ரூ.2,25,000ஆகவும் உயரும் என்றும் அறிவித்தார்.

அதாவது, உயரதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்ட ஒரு மாத ஊதிய உயர்வு, கீழ்நிலை யில் உள்ள 15.4 பேரின் உயர்வுக்குச் சமமாகும். அதே போல கீழ்நிலையில் உள்ள ஒருவரின் மாதச் சம்பளத்தைப் போல, மேல்நிலையில் உள்ள ஒருவருக்குக் கிடைத்த மாத உயர்வு மட்டும் 9.42 மடங் காகும். இந்த ஒரு உதாரணம் மட்டும் ஒட்டுமொத்த நிலைமையை உணர்த்துவதாக இருக்கும். ஆரம்ப நிலையில் கீழ்மட்டத்தில் இருக்கும் ஒருவரின் சம்பளமும், உயர் மட்டத்தில் இருக்கும் ஒருவரின் சம்பளமும் 1:14.33 என்ற விகிதத்தில் உள்ளது. இந்த மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுதான் ஒட்டுமொத்தமான சம்பள விகிதம் மிக அதிகம் என்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது.

இதைப் பயன்படுத்தியே அதிகாரப் பணி நிலையில் உச்சத்தில் இருப்பவர்கள், கீழ்மட்டத்தில் இருப்பவரது நியாயமான கோரிக்கைகளை மறுக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறையே சம்பள உயர்வு வழங்கப்படுகிறது. அந்தச் சம்பள உயர்வில் குறிப்பிட்ட பகுதியை மறுப்பது ஆறாவது ஊதியக் குழு பரிந்துரையை அமல்படுத்தும்போது முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தொடங்கியது. இதைத்தான் வழக்கம் என்று சொல்லி அமைச்சர் ஜெயக்குமார் நியாயப்படுத்துகிறார். ஊதிய உயர்வு அளிப்பது என்று முடிவுசெய்துவிட்ட பிறகு, ஒரு தேதியைக் குறிப்பிட்டு அதிலிருந்து ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது என்று பொதுவாக அறிவித்துவிட்டு, பல மாதங்கள் அந்த உயர்வுக்கான பணத்தைச் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்குக் கொடுக்காமல் இருப்பது ஏமாற்றமாகும். ஆரம்பத்தில் தனியார் முதலாளிகள் செய்த இத்தகைய நடவடிக்கையை வேடிக்கை பார்த்த அரசுகள் இப்போது தாங்களும் அதே காரியத்தைச் செய்வது கொடுமையானது.

## மறுக்கப்படும் நிலுவைகள்

கடந்த 6-வது ஊதியக் குழு பரிந்துரையின்போது 12 மாதங்கள் அரசு ஊழியர்களின் நிலுவைத் தொகையைத் தர மறுத்த அரசாங்கம், அதே நடைமுறையை இந்த முறை 21 மாதங்களுக்கு நீட்டித்து நியாயப்படுத்தவும் செய்கிறது. ஆனால், ஐஏஎஸ், ஐபிஎஸ் மற்றும் நீதித் துறை அதிகாரிகள் இந்த 33 மாத நிலுவைத் தொகையையும் பெற்றுவிட்டார்கள். தனியார் நிறுவனங்கள் போதுமான சம்பளம் தரவில்லை என்பதைத் தட்டிக்கேட்டுச் சரிசெய்ய வேண்டிய அரசாங்கம், அவர்கள் குறைவாகக் கொடுக்கிறார்கள், நாங்கள் அதிகமாகத் தருகிறோம் என்ற வாதத்தை முன்வைக்கிறது. போராடும் ஊழியர்களுக்கு எதிராகப் பொதுமக்களையும், இதர வேலை தேடும் பிரிவினரையும் தூண்டிவிடுகிறார்கள்.

இப்போது மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப் படுகிறார்கள் என்பது உண்மையே.

ஆனால், இதற்கு முழுக் காரணம் அரசு மட்டும்தான். உரிய காலத்தில் சம்பந்தப்பட்டவர்களோடு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியிருக்க வேண்டும். மாநில அரசின் இன்றைய நிதிநிலைக்குக் காரணம் மத்திய அரசு வரிவருவாயைப் பெரும் பகுதி அள்ளிக்கொண்டு போனதுதான். அதைக் கேட்பதற்கும், பெறுவதற்கும் செய்யாமல், அரசு ஊழியர்களுக்கு எதிரான நிலைப்பாட்டை மாநில அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது....

வேலை பளு காரணமாக ஊழியர்கள்? தங்களை மாய்த்துக் கொள்வது இதனால் தான் என்னவோ?

❖



# சமூக மாற்றமே பெண் விடுதலை

**மா**ர்ச் 8 சர்வதேச மகளிர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுவதென்பது, பெண்கள் உண்மையான சமத்துவத்தை அடையவேண்டும், வன்முறையிலிருந்தும் வறுமை பிடியிலிருந்தும் மீள வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக உலகமெங்கும் ஊர்வலங்களாக கருத்தரங்குகளாக அரசு விழாக்களாக நடத்தப்படுகிறன்றது.

மார்ச் மாதம் தொடங்கியதுமே மகளிர் தின கொண்டாட்ட நிகழ்ச்சி அழைப்பிதழ்களை ஏராளமாக பார்க்கலாம். அவற்றிலே பல கோலப்போட்டி, பாட்டுப் போட்டி, விளையாட்டு மற்றும் பேஷன் ஷோ என போட்டிகளின் அணிவகுப்பாக இருக்கும்.

அழகி போட்டிகளை பெரு நிறுவனங்கள் தங்களுடைய வியாபார விருத்திக்காக பயன்படுத்திக் கொள்கிறார்கள். மகளிர் தினம் உருவான வரலாற்றை நாம் தெரிந்துக் கொண்டால் இதுபோன்ற போட்டிகளை நடத்த மாட்டோம் நடத்த அனுமதிக்க மாட்டோம்.

1851ல் பெண்களும் ஓட்டுரிமை கேட்டு நியூயார்க்கில் நடைபெற்ற கருத்தரங்கில் இசபெல்லா என்ற பெண்ணின் குரல் ஒலித்தது. நானும் வயலில் உழுதேன், நாற்று நட்டேன் அறுவடை செய்தேன் என் தலை சுமையை தூக்கி விடக்கூட யாருமில்லை.

ஆண்களை போல நானும் வேலை செய்ய முடியும் உணவு உண்ண முடியும் பெண்ணுரிமை எனக்கு கிடைக்காத வரை பேசி என்ன பயன் என்று அவர்கள் பேசிய வார்த்தை இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இதனை தொடர்ந்து 1857ஆம் ஆண்டு மார்ச் 8ல் நியூயார்க் நகரத்தில் பின்னலாடை தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலைப் பார்த்த பெண்கள் கூலி உயர்வுக்காகவும், 12 மணி நேர வேலை நேரத்தை எதிர்த்தும், தரமற்ற வேலை தளத்தை எதிர்த்தும் தெருக்களில் இறங்கி போராடினார்கள், போராடிய பெண்கள் தாக்குதலுக்கும் உள்ளானார்கள்.

1908 மார்ச் 8ல் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள், குழந்தை தொழிலாளர் உழைப்பதற்கு முடிவு கட்டும் விதத்திலும் பெண்களின் உரிமைக்காகவும் வீதிகளில் ஊர்வலமாக சென்றது போராட்டத்தின் துணிச்சல் மிக்க முதல் அலையாகும்

கம்யூனிஸ்ட் பெண்களுக்கான சர்வதேச முதல் மாநாடு இனஸ்ஸா என்ற பெண் தோழரின் முயற்சியில் நடந்தது. உடல் நலம் பாதிக்கப்பட்டு அவர் இறந்தபோது பெண்கள் அகிலத்தின் செயலாளராக கிளா ஜெட்கின் பொறுப்பேற்றார்.

1910ல் கோபன் ஹேகன் நகரில் நடந்த சர்வதேச தொழிலாளர் பிரதிநிதிகள் கூட்டத்தில் தொழிலாளர் இயக்கங்களின் பங்கை போற்றுகின்ற வகையிலே ஜெர்மன் தலைவர் கிளாரா ஜெட்கின் அம்மையார் அவர்களால் மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினமாக முன்மொழியப்பட்டது.

1911ல் ஜெர்மனியிலும், ஆஸ்திரேலியாவிலும் டென்மார்க்கிலும் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் சோஷலிட்டுகள் வேலை நிறுத்த போராட்டங் களை நடத்தியபோது அலெக்ஸ்சாண்ட்ரா கொலண்டாய் என்ற புரட்சிகாரர், பெண்களின் போராட்டங்கள், உத்வேகமும் உணர்ச்சியும் சங்கமிக்கும் சமுத்திரம் என வர்ணித்தார்.

1917 மார்ச் 8ல் வரலாற்று சிறப்புமிக்க பெண்கள் தினத்தன்று செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில் ரொட்டி துண்டிற்காகவும் அமைதிக்காகவும் வேலை நிறுத்த போராட்டத்தில் பெண்கள் ஈடுபட்டனர். போராட்டத்தை தொடர்ந்து இது கலவரமாக வெடித்தது, 1917 சோசலிச நிர்மாணத்திற்கு பிறகு சோசலிச காலண்டர்களில் மார்ச் 8 பெண்கள் தினமாக மாறியது. 1921 அதிகார பூர்வமாக்கப்பட்டு மார்ச் 8 பெண்கள் தினமாக நடைபெற்று வருகிறது.

தற்போது ரஷ்யா, உக்ரைன், உஸ்பெகிஸ்தான், வியாட்நாம், ஆப்கானிஸ்தான், ஆர்மேனியா, அஜர்பைஜான், பெலாரஸ், பூர்கினியா பெசோ, கம்போடியா, கியூபா, எரித்திரியா, கஜகஸ்தான், மால்டோவா, மங்கோலியா, மான்டேநெக்ரோ, தஜிகிஸ்தான், துருக்மேனிஸ்தான் ஆகிய நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்திற்கு விடுமுறை வழங்கப்படுகிறது.

பெண்களுக்கான வாக்குரிமை என்பது முதன் முதலில் நியூசிலாந்து நாட்டில் 1893ல் வழங்கப்பட்டது. 1920ல் தான் அமெரிக்காவில் பெண்களுக்கான வாக்குரிமை வழங்கப்பட்டது. சவுதி அரேபியாவில் கூட 2011ல் பெண்களுக்கான வாக்குரிமையை மன்னர் அப்துல்லா வழங்கினார்,

மகளிர் தினம் என ஏற்பட்ட பிறகு பெண்களின் நிலை மேம்பட்டிருக்கிறதா என பார்த்தால் முந்தைய காலங்களிலே பெண்களை தெய்வமாக சித்தரித்தார்கள். பூமியை பூமி தாய் என்றும், மலையை மலை மகள் என்றும், கடலை கடல் அன்னை என்றும், நாட்டிலே ஓடும் அனைத்து ஜீவ நதிகளைக்கூட கங்கா, யமுனா, கோதாவரி, காவேரி, என பெண் பெயரிட்டே அழைத்தார்கள்.

ஆனால் வீட்டிற்குள்ளே பெண்களின் நிலை என்பது வீட்டு வேலைகளை செய்யும் பணிப்பெண்ணாகவும், பிள்ளைகளை பெற்று கொடுக்கும் இயந்திரமாகவும் ஆண்களின் கட்டுப்பாட்டிலும் தான் இருந்து வந்துள்ளார்கள்.

கணவர் இறந்தால் மனைவி உடன் கட்டை ஏறும் நிலமை ஒருபுறம், ஆனால் மனைவி இறந்தால் மனைவியின் கல்லறை காயும் முன்னரே கணவர் மறுமணம் புரிந்து கொள்வார். குழந்தை பருவத்திலே திருமணமுறை என்பது மறுபுறம் இருந்து வந்தது. தற்போது இந்த நிலை மாறி பாரதி கண்ட கனவு பலிக்கும் வகையில் பெண்கள் சுதந்திரமாக இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

விளையாட்டு முதல் விஞ்ஞானம் வரை பெண்களின் பங்கு என்பது மகத்தானதாக இருந்து கொண்டுத்தான் இருக்கிறது. சுனிதா வில்லியம்ஸ் மற்றும் கல்பனா சாவ்லா போன்றோர் விண்வெளி வீராங்கனைகளாக சாதனை படைத்தனர். ஒலிம்பிக்கில் கூட பதக்கம் வென்றது பி.வி. சிந்து மற்றும் சாக்ஷி மாலிக் போன்ற பெண்களே.

பெண்கள் அனைத்து துறையிலேயும் 33% இட ஒதுக்கீடு கேட்டு போராடி வந்தாலும் போராடிக் கொண்டிருந்தாலும் தனியார் துறையை பொருத்தவரையில் பெண்களின் பங்கு ஆண்களுக்கு நிகராக என்று கூறுவதைவிட அதிகமாகவே இருக்கின்றது என்பதே உண்மை. தனியார் துறையிலே பெண்களின் எண்ணிக்கை உயர்விற்கு காரணம் ஆண்களை விட குறைந்த ஊதியத்தின் பெண்களின் நியமனம் மற்றும் தனியார் நிறுவனங்களின் வியாபார நோக்கமே என்பதே உண்மை.

இன்றைய அளவில் பெண்கள் பல துறைகளில் முன்னேற்றம் கண்டு வருகிறார்கள் கல்வி நிலையங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு கழகங்கள், சிறு தொழில் நிறுவனங்கள், நவீன தொழில் நுட்பத்துறைகளில் பெண்கள் கணிசமான அளவில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் காவல்துறை, போக்குவரத்துத்துறை, விமானப் பணிப் பெண்கள் மற்றும் பைலட், போன்ற பதவிகளிலும் பணியாற்றுகின்றனர்.

சுதந்திர இந்தியாவில் பிரதமராக இந்திரா காந்தி, குடியசு தலைவராக பிரதீபா பாட்டீல், தமிழகத்தின் முதலமைச்சராக பதவி வகித்த திருமதி. வி.என், ஜானகி, செல்வி ஜெ. ஜெயலலிதா, உத்திரபிரதேச முதலமைச்சராக செல்வி மாயாவதி, பீகார் முதலமைச்சராக திருமதி ராப்ரி தேவி, டெல்லி முதலமைச்சராக திருமதி ஷீலா தீட்சித், ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா, ஒரிசா முதலமைச்சராக நந்தினி சத்பதி, குஜராத் முதல்ரவான ஆனந்தபென் படேல், மத்திய பிரதேச முதலமைச்சராக உமா பாரதி, மேற்குவங்க முதல்வராக மம்தா பானர்ஜி,

ஜம்மு காஷ்மீர் முதல்வராக மெகபூபா முப்தி உள்ளிட்டோர் பெண்கள் பதவி வகித்துள்ளனர். 25க்கும் மேற்பட்ட பெண்கள் ஆளுநராகவும், உயர்பதவி வகித்துள்ளனர். ஐஏஎஸ்., ஐபிஎஸ்., ஐஎப்எஸ் போன்ற உயர் பதவிகளில் முத்திரைப் பதித்து வருகின்றனர்.

இருந்த போதிலும் பெண்களின் வளர்ச்சிக்கு பல நேரங்களிலே பெண்களே தடைக்கல்லாக உள்ளனர் என்பதே உண்மை.

ஆண்கள் பயன்படுத்தும் அழகு சாதனங் களுக்கு கூட பெண்களை பயன்படுத்தி விளம்பரம் செய்வது என்பது, பெண்களை வியாபாரப் பொருளாக பயன்படுத்தி சமுதாயத்தில் அவர்களை இழிவு படுத்துகிறார்கள் என்பதே யதார்த்தம். பிளேட், ஷேவிங் க்ரீம், சென்ட் ஸ்பிரே, உள்ளாடைகள் போன்ற பொருட்களுக்கு கூட பெண்களை பயன்படுத்தும் பெறு நிறுவனங் களுக்கு பெண்களே துணை போகின்றனர்.

மிக்சி, கிரைண்டர், சலவை இயந்திரம், சலவை சோப், (Mixi, Grinder, Washing Machine, Detergent Soap) அனைத்து சமயலறை சாதனங்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்களுக்கும் பெண்களே விளம்பரம் செய்வதன் மூலம் இந்த பணிகள் அனைத்தும் பெண்கள் மட்டுமே செய்யக்கூடிய பணியாக எண்ணம் உருவாக்கப் படுகின்றது.

மேலும், இன்றைய சூழ்நிலையில் பெண் களின் மீதான வன்முறை சம்பவங்கள் பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டு வருகின்றன. அலுவலகங்களில், மருத்துவமனைகளில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பொது இடங்களில் என பட்டியலிடலாம்.

1) டெல்லியில் மருத்துவக்கல்லூரி மாணவி நிர்பயா ஓடும் பஸ்சில் 6 நபர்காளல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டது,

2) கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் (சின்னப்பம் பாளையம்) 200க்கும் மேற்பட்ட மாணவிகளை 4 நபர்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கிய சம்பவம்.

3) ஹைதராபாத்தை சார்ந்த கால்நடை மருத்துவர் பிரியங்கா ரெட்டி மர்ம கும்பலால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு எரித்து கொன்ற கொடூர செயல்

4) சென்னை நுங்கம்பாக்கம் இரயில் நிலையத்தில் அதிகாலையில் சுவாதி என்கின்ற பெண் ஐடி ஊழியர், அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்ட சம்பவம்

5) சென்னை அயனாவரத்தில் காது கேட்காத வாய்பேச முடியாத 7ம் வகுப்பு படிக்கும் 12 வயது மாணவிக்கு மயக்க ஊசி கொடுத்து 20க்கும் மேற்பட்ட கயவர்களால் பல மாதங்களாக தொடர்ந்து பாலியல் வன்கொடுமை செய்திட்ட கொடூர செயல்

6) தனியார் கல்லூரி மாணவிகளை தவறான உறவில் ஈடுப்படுத்த முயன்ற கல்லூரி பேராசிரியரான நிர்மலா தேவி

7) தேனி மாவட்டத்தில் பாலியல் கொலை செய்யப்பட்ட இளஞ்சிறுமி நந்தினி, சென்னை யில் ஆசிட் வீச்சால் உயிரிந்த பெண், திருமங்கலத்தில் ஆசிட் வீச்சால் பாதிக்கப்பட்ட 2 பெண்கள் போன்றவை பல கூறலாம்

தேசிய ஆவண காப்பகத்தின் புள்ளி விவரத் தின்படி கடந்த 2018ம் ஆண்டில் இந்தியாவில் நாள் ஒன்றுக்கு 109 பெண் குழந்தைகள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாவதாகவும், இது முந்தைய ஆண்டைவிட 22 சதவீதம் அதிகம் என தெரிவித் துள்ளது. இந்த ஆண்டிலே போக்சோ சட்டத்தின் கீழ் 39 ஆயிரத்து 827 குழந்தை பாலியல் துன்புறுத்தல்கள் புகார் செய்யப்பட்டன. 21 ஆயிரத்து 605 குழந்தை கற்பழிப்பு சம்பவங்கள் புகார் அளிக்கப்பட்டன.

இப்படியே நாடு சென்று கொண்டிருப்பதால் ஒவ்வொரு நாளும் நம் நாட்டில் பெண்கள் குறித்த பாதுகாப்பு நிலை மிக மோசமாக சென்றுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில் பெண்களுக்கான விடுதலையும் பாதுகாப்பும் முழுமையாக கிடைத்துவிட்டதாக நாம் கூற முடியாது.

உலகெங்கிலும் மகளிர் தினம் கொண்டாடப் பட்ட சூழ்நிலையிலே, மகளிரின் பெருமைப் பற்றியும், இன்றைய காலக்கட்டத்திலே அனைத்து நிலையிலும் பெண்களின் பங்கு என்பது மகத்தானது என்பது குறித்தும், இந்த சமுதாயத் திலே நாம் அவர்களுக்கு அளிக்க வேண்டிய முன்னுரிமை குறித்தும் நாம் எடுத்துரைக்க வேண்டும்.

பெண் என்பவள் ஒவ்வொருவரின் வாழ்விலும் தாயாய், மனைவியாய், சகோதரிகளாய், மகளாய், தோழியாய், என பலவிதத்திலே நம் அனைவரின் வாழ்க்கையில் பரிணமிக்கும் அவர்களுக்கு இந்த சமுதாயத்தில் உரிய சமத்துவம் அளிப்பதும்

மற்றும் வன்முறையிலிருந்தும் பாதுகாப்பு அளிப்பதும் நமது கடமை என்பதை உணர வேண்டும்.

புராணங் காலந்தொட்டே பெண்ணை உடலால் மதிப்பிடும் ஆண் பார்வை மாறவில்லை இன்று அது நவீனமாக்கப்பட்டிருக்கிறது. பெண் இதை உணரவில்லை. சமூக அங்கீகாரத்திற்காக சமூகத்தோடு அனுசரித்து செல்வதே பாதுகாப்பானதாக பெரும்பான்மை பெண்கள் நினைக்கிறார்கள். இது அடிமைத்தனத்தின் வெளிப்பாடு. மாற்றம் என்பது இயற்கையாய் அனைத்திலும் நடந்து வந்தாலும் நமக்கு தேவையான மாற்றங்கள், நமது நலன் சார்ந்த மாற்றங்கள் பற்றி சிந்திக்க வேண்டியதும், அப்படிப்பட்ட மாற்றத்திற்கான களப்போராட்டத்தில் ஈடுபட வேண்டியது பெண்களின் அறிவுடைமையாகும். ஆணாதிக்கத்தை தனிப்பட்ட முறையில் பேசி தீர்க்க முடியாது. அது ஒரு சமூக ஒடுக்குமுறை, எனவே பொது வெளியில்தான் அதன் அழுக்கை துவைத்து அலசவேண்டும்.

ஒரு பக்கம் பெண் என்பவள் வீட்டிற்கு அடங்கி ஒடுங்கி போக வேண்டியவள் - இன்னொரு புறம் நுகர்ந்து பார்க்கக்கூடிய ஒரு பொருள் என்ற இரட்டை தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும் என்றால் மகளிர் தினத்தில் மட்டும் பெண்ணுரிமைப் பேசி வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இதற்கு ஆணும் பெண்ணும் சேர்ந்து போராடினால் மட்டுமே சாத்தியம். இதற்கு மெரினா போராட்டம் நம் கண் முன்னே உள்ள சிறந்த உதாரணம். போராட்டக் களத்தில் முகம் தெரியாத ஆணும் பெண்ணும் கைகோர்த்து நின்ற அந்த நிலையில், தான் ஒரு ஆணின் கையை பிடித்திருக்கின்றோம் என்ற அச்சமோ- தான் ஒரு பெண்ணின் கையை பிடித்திருக்கின்றோம் என்ற எண்ணமோ இருவருக்கும் ஏற்படவில்லை. காரணம் போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்ற எண்ணமே இதை சாத்தியப்படுத்தியது.

அதுபோல இந்த சமூக மாற்றத்திற்கு ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து போராடுவது அவசியம், சமூக மாற்றமே பெண் விடுதலையை சாதிக்கும் ஒரே வழி.


- **இரா.ந. நம்பிராஜன்**

# சரித்திரம் புரட்டும் ஜான்சி ராணிகளாய் !

உடல் மட்டுமே பெண்ணாய்ப் பார்க்கும் மூடர் கூட்டமே
உயிரும் மெய்யுமாய் இருக்கும் ஆயுத எழுத்து நாங்கள்!
கற்பு என்னும் கபடச்சிறையில் கள்ளத்தனமாய் அடைத்து வைக்கும் கயவர் கூட்டமே
காதலுடன் களறியும் அறிந்த செந்தணல் நாங்கள்!
கணவன் செய்த தவறுக்கு கண்மூடித்தனமாய் மக்களை எரித்த
கண்ணகி அல்ல நாங்கள்!
அந்நியன் சொன்னானென அக்னிப்பிவேசம் செய்யச்சொன்ன
ராமனை விட்டு தன்னை எரித்த
சீதையுமில்லை நாங்கள்!
தாசி வீட்டுக்குச் செல்லத்துடித்த சீக்காளி கணவனை
கூசாமல் கூடையில் தூக்கிச் சென்ற நளாயினி அல்ல நாங்கள்!
துகிலுரிந்தவனை துவம்சம் செய்யாமல்
அவனுக்கு தோதாய் கைகள் தூக்கி கடவுளை அழைத்த
திரௌபதியுமல்ல நாங்கள்!
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
பொன்னியின் செல்வனின் பூங்குழலியாய்
எங்கள் சுதந்திரத்தை நாங்களே வரையறை செய்து
பண்பாடும் காத்து புரட்சிகள் செய்வோம்!
சரித்திரம் மறைத்த அந்தபுர ராணிகளாய் அல்ல
சரித்திரம் புரட்டும் ஜான்சிராணிகளாய்!!



- **ஜி.கே. கிருத்திகா**



# தனியார் மயமாகும் தொழிலாளர் நலத்துறை

**ந**ம் நாட்டில் 50-க்கும் மேற்பட்ட தொழிலாளர் நல சட்டங்கள் உள்ளன. இவைகள் அனைத்தும் தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்றவையே. ஆட்சியாளர்கள் மனமுவந்து தானாகவே கொடுத்தவை அல்ல. ஆனால் இந்த சட்டங்கள் பெரும்பாலும் நடைமுறைபடுத்தப் படாமலேயே உள்ளன.

தொழிலாளர் நல அலுவலகங்களில் எழுப்பப் படும் தொழிற்தாவாக்களில் 90 சதம் தொழிலாளர் நலச் சட்டங்கள் நடைமுறைபடுத்தப்படாமை குறித்ததே. எங்கெல்லாம் தொழிலாளர்கள் அமைப்பு ரீதியாக திரண்டு வலுவான போராட்டம் நடத்துகிறார்களோ அங்குதான் தொழிலாளர் சட்டங்கள் ஓரளவுக்கேனும் அமலாகிறது.

## சட்ட திருத்தங்களுக்கு முன்வைக்கப்படும் காரணங்களும் - உண்மையும்

தற்போதுள்ள மத்திய ஆட்சியில் முதலீட்டாளர்களுக்கு சாதகமாக தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தப்படுகின்றன. இதற்கு அவர்கள் கூறும் காரணம் என்னவெனில், சட்டங்கள் திருத்தப்படுவதன் மூலம் முதலீட் டாளர்களை கவர முடியும் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்பதே. ஆனால் உண்மை இதற்கு நேர்மாறானது.

கடந்த 30 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பையும் வேலை இழப்பையும் ஒப்பிட்டால் உண்மை புலனாகும். சட்டத் திருத்தங்கள் மூலம் மென்மேலும் சலுகைகள் முதலீட்டாளர்களுக்கு அளிப்பது முதலீடுகளை கூட்டும் என்பது பிரமையே. தொழிலாளி வர்க்கத்தை ஒட்டச் சுரண்டுபவர்களுக்கு கூடுதல் சலுகைகள் காட்டுவது எவ்வாறு நியாயமாகும்? நேரடி வரிகள் குறைத்தால், வரி கட்டுபவர்கள் கூடுதலாக வரி பாக்கி தவிர்த்து கட்டுவதில் ஆர்வம் செலுத்துவார்கள் என நிதி அமைச்சர் கூறும் அபத்தத்தை போன்றதே இது. ஒவ்வொரு ஆண்டும் நேரடி வரி பாக்கிகள் ரூ.5 லட்சம் கோடியை தாண்டுகிறது. 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2005-2010) மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு சராசரியாக 8.5 சதம் கூடியது. ஆனால் வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் 0.7 சதம் ஆக நிலை குலைந்தது. 2000-2005-ல் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் 2.7 சதமாக உயர்வு இருந்தது. எனவே சட்டங்களை திருத்தினால் வேலை வாய்ப்பு கூடும் என்பது தவறான கருத்து.

இன்றைய மத்திய அரசும், சில மாநில அரசுகளும், தொழிலாளர் சட்டங்களில் முதலாளி களுக்கு மிகவும் சாதகமாக பல திருத்தங்கள் செய்வதில் மிகுந்த முனைப்பு காட்டிவருகின்றன.

மத்திய அரசு மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில அரசுகள் மேற்கொண்டுள்ள தொழிலாளர் சட்டதிருத்தங்கள் அனைத்தும், முதலாளிகள் இஷ்டம் போல் தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்ய, லே-ஆப் செய்ய அதிகாரம் வழங்குபவை ஆகும். பெருமளவில் காண்ட்ராக்ட் முறையை

புகுத்தவும் அதிகாரமளிக்கும். 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள், அனைத்து தொழிலாளர் நலச் சட்டங்களின் வரம்புக்கு அப்பாற்பட்டவர்களாக தூக்கி எறியப்படுவர். இதன் மூலம் உழைப்புச் சுரண்டல் தீவிரமடையும், கொடூரமாகும்.

தொழிலாளர் சட்டங்கள் அமலாவதை காட்டிலும் மீறப்படுவதே நடைமுறையாக உள்ளது. அமைப்பு சார்ந்த தொழில்களில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு சட்டப்படியான குறைந்த பட்ச ஊதியமோ, பி.எப். மற்றும் இ.எஸ்.ஐ. பலன்களோ கிடைப்பதில்லை.

நிரந்தரத் தன்மையுள்ள, தொடர்ச்சியான வேலைகளில் கூட, காண்ட்ராக்ட் தொழிலாளர் (ஒழுங்குபடுத்துதலும், ஒழித்தலும்) சட்டம், 1970-ஐ மீறி, பல்வேறு பெயர்களில் காண்ட்ராக்ட் தொழிலாளர் பணியில் அமர்த்தப்படுகிறார்கள். அரசு நடத்தும் நிறுவனங்களில் கூட இத்தகைய சட்ட மீறல்கள் பரவலாக உள்ளதை காணலாம். பொதுத்துறை நிறுவனங்களில், 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர், தனியார் நிறுவனங்களில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் காண்ட்ராக்ட் தொழிலாளர்களாக உள்ளனர். பணி நேரம், மிகை நேரப் பணி, பணியிடங்களில் பாதுகாப்பு குறித்த இதர தொழிலாளர் சட்டங்களும், முதலாளிகளால் அப்பட்டமாக மீறப்படுகின்றன. எண்ணற்ற தொழிற்சாலை மற்றும் சேவை நிறுவனங்களில் கூடுதல் ஊதியம் இன்றி, 12 மணிநேரம் வேலை வாங்கப்படுவது என்பது இன்றைய யதார்த்த நிலையாக உள்ளது. சட்டப்படியான இரட்டிப்பு ஊதியம் வழங்குவதற்கு பதிலாக, மிகை நேரப்பணிக்கு பெயரளவிற்கு சற்று கூடுதல் ஊதியம் வழங்கப்படுகிறது.

அரசுகளின் ஆதரவுடன் சட்டமீறல்கள் நடைபெறுகின்றன. நவீன தாராளமய பொருளாதார கொள்கை அமலாக்கத்தின் விளைவாக, தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. தொழிலாளர் மீது ஒடுக்குமுறை ஏவப்படுகிறது. மத்திய, மாநில அரசுகளின் அமலாக்கத்துறை, தொழிலாளர் சட்டங்கள் மீறப்படுவதை கண்டுகொள்வதே இல்லை. பணியிடங்களை தொழிலாளர்துறை அதிகாரிகள் ஆய்வு செய்வது சுத்தமாக கைவிடப்பட்டுவிட்டது.

இதனால் தொழிலாளர்களிடம் முதலாளிகள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளும் நடைமுறை ஊக்குவிக்கப்படுகிறது. நாடாளுமன்றம் நிறைவேற்றிய தொழிலாளர் சட்டங்களை அமலாக்கக்கோரி தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் போராட வேண்டிய நிலை உள்ளது. இப்போராட்டங்களில் பங்கேற்ற தொழிலாளிகள், முதலாளிகளாலும் மற்றும் அரசாலும்; பழிவாங்கப்படும் அவலநிலையும் உள்ளது.

அரசு ஆதரவுடன் நிறைவேற்றப்படும் தொழிலாளர் சட்ட அத்துமீறல்களை எதிர்க்கும் தொழிற்சங்கங்களை அரசு இயந்திரம் ஒடுக்குகிறது. தொழிற்சங்க சட்டத்தின்கீழ் பதிவுக்காக ஆயிரக்கணக்கான சங்கங்கள் சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்கள் தொழிலாளர் துறையில் தூசி படிந்து, கிடப்பில் போடப்பட்டுள்ளது. இது தொழிற்சங்க சட்டம் 1926ன் மீதான அப்பட்டமான அத்துமீறல் ஆகும்.

## நவீன தாராளமய விளைவுகள்

கடந்த 30 ஆண்டுகளாக மத்திய அரசு பின்பற்றிவரும் நவீன தாராளமய பொருளாதார கொள்கைகளால், தொழிலாளர்களை கொள்ளையடிப்பது, மனிதநேயமற்ற வகையில் சுரண்டுவது என்பது நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகிறது. 1980-களின் இறுதியில், உற்பத்தித் துறையில் நிகர மதிப்பு கூட்டலில் 30% ஆக தொழிலாளர் ஊதிய பங்கு 90களின் மத்தியில் 20% ஆக குறைந்து, 2010-ல் 9.5% ஆக மேலும் குறைந்து விட்டது. அதேசமயம் முதலாளிகளின் லாபப் பங்கு 20% ஆக 1980-களின் இறுதியில் இருந்தது: 2010-ல் 60% ஆக செங்குத்தாக உயர்ந்துள்ளது. இது, உழைப்புச் சுரண்டல் தீவிரமடைந்துள்ளதை பளிச்சென எடுத்துக்காட்டுகிறது.

இதே காலகட்டத்தில், தொழிலாளர்களின் உற்பத்தி திறன் (Productivity) வெகுவாக உயர்ந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியும் சராசரியாக 5% ஆக இருந்தது. உற்பத்தித் துறை வளர்ச்சி விகிதம் 10%க்கு மேலும் இருந்தது. தொழிலாளர் அமைச்சகத்தின் ஆண்டறிக்கை (2012), இந்தியத் தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் அடையாளம் கண்டு பதிவு செய்திருக்கிறது. அதன்படி, இந்திய தொழிலாளி ஒரு மணி நேரத்திற்கு 4.17 அமெரிக்க டாலர் ஈட்டித் தருகிறார். அதாவது மணிக்கு ரூ.250 (அல்லது) ஒரு நாளைக்கு ரூ.2000 ஈட்டித் தருகிறார். ஆனால் அவருக்கு அளிக்கும் குறைந்தபட்ச ஊதியம் எவ்வளவு? அதிகபட்சமாக மாதத்திற்கு ரூ.500-லிருந்து ரூ.6000 வரை மட்டுமே.

பல்வேறு தொழிற்சாலைகளில் 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் பதிவேடுகளில் 20 பேர் மட்டுமே வேலை செய்வதாக இருக்கும்.

## தொழிற்சாலை சட்டம்

தற்போதுள்ளன தொழிற்சாலை சட்டம் பிரிவு 56-ன் படி உணவு இடைவேளை உட்பட 8 மணிநேரம் வேலை செய்வதற்காக, தொழிலாளி தொழிற்சாலை வளாகத்திற்குள் இருக்க வேண்டிய அதிகபட்ச நேரம் (spread over time) 10.5 மணி ஆகும். இது 12 மணி நேரமாக மாநில அரசு கருதினால் மாற்றலாம். தற்போதுள்ள ஷரத்துப்படி தலைமை தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களுக்கு எழுத்துப்பூர்வமான தகுந்த காரணங்களை நிர்வாகம் கொடுத்தால்தான் 10.5 மணி நேரத்தை 12 மணியாக உயர்த்த முடியும்.

மூன்று மாதங்களில் மிகைநேரப்பணி என்பது 50 மணி நேரத்திற்கு மேல் இருக்கக்கூடாது என பேக்டரி சட்டப் பிரிவுகள் 64 மற்றும் 65 கூறுகின்றன. இது, சட்டத் திருத்தம் மூலம் 100 மணி நேரமாக உயர்த்தப்படுகிறது. மேலும் மாநில அரசு சில விதிவிலக்குகளை அளித்தால் தலைமை ஆய்வாளர் 'பொதுநலன்' கருதி 125 மணிநேரம் எனவும் உயர்த்த முடியும். இதுவும் பிரிவு 56-ல் மேற் கொள்ளப்படும் திருத்தமும் சேர்ந்தால் தொழிலாளர்களுக்கு கூடுதல் சித்ரவதை. மிகை நேரப் பணியை கூட்டுவதன் மூலம் புதிய வேலைவாய்ப்பு உருவாவது பாதிக்கப்படும். உற்பத்தி செலவை குறைப்பதற்கு முதலாளிகள் வழிவகுத்துக்கொள்வார்கள். பிரிவு 66-ல் திருத்தம் செய்வதன் மூலம். இரவு நேரப் பணிகளில் பெண் தொழிலாளர்களை பணியில் ஈடுபடுத்த இருந்த தடைகள், முறைப்படுத்துதல் தளர்த்தப்படுகிறது.

தொழிற்சாலை என்ற வரையறையில் 40-க்கும் கீழ் தொழிலாளர் எண்ணிக்கை உள்ள ஆலைகள், தொழிற்சாலையாக கருதப்படமாட்டாது என்ற சட்டதிருத்தமும் முன்மொழியப்பட்டுள்ளது. இது எண்ணற்ற நிறுவனங்களை சட்டத்தின் பிடியில் இருந்தும் வரையறையிலிருந்தும் நீக்கிவிடும். இந்த திருத்தத்தின் ஒட்டு மொத்த நோக்கம், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாப்பை பறிப்பதேயாகும்.

## குறைந்தபட்ச ஊதிய சட்டம்

1957-ல் நடைபெற்ற 15-வது இந்தியத் தொழிலாளர்கள் மாநாடு (மத்திய அரசு ஆண்டுதோறும் கூட்டும் முத்தரப்பு மாநாடு) சராசரி இந்தியத் தொழிலாளியின் குறைந்தபட்ச ஊதியம் என்னவாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானித்தது. உணவு, உடை, இருப்பிடம், எரிபொருள் தேவைகளை கணக்கில் கொண்டு இது தீர்மானிக்கப்பட்டது. உச்சநீதிமன்றம் ரேப்டகாஸ் பிரெட் வழக்கில் மேலும் 25 சதம் சடங்கு, திருமணம், பொழுதுபோக்கு, பண்டிகை செலவுகளுக்காக சேர்த்து குறைந்த பட்ச ஊதியம் கணக்கிட வேண்டும் என பரிந்துரைத்தது. 2011-ல் கூடிய 43 வது இந்திய தொழிலாளர் மாநாடு இதை ஏற்றுக்கொண்டு தனது பரிந்துரையாக அரசுக்கு வழங்கியது.

ஆனால் அரசின் உத்தேச திருத்தமானது. தேசிய அடிமட்டக் குறைந்தபட்சக் கூலி தீர்மானிக்க வேண்டும் எனக் கூறுகிறது. அரசு, அரசு அதிகாரிகள், முதலாளிகளின் விருப்பத்திற்கேற்ப இது அமையும் அபாயம் உள்ளது.

## பயிற்சியாளர் சட்டம்

பயிற்சியாளர் சட்டம் 1961-ல் மேற்கொள்ளப் படவுள்ள திருத்தம் சட்டத்தை மீறும் முதலாளிகள் சிறை தண்டனை பெறுவதிலிருந்து விலக்கு அளிப்பதாகும். வெறுமனே ரூ.500 அபராதம் என்ற வகையில் திருத்தம் அமைந்துள்ளது. பயிற்சியாளர்களை புதிய தொழில்களில் ஈடுபடுத்தும் நெளிவு சுளிவான அதிகாரம் வேலை அளிப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது. பயிற்சியாளர் சட்டத்தில் தொழிலாளி என்ற வரையறையில் காண்ட்ராக்ட் தொழிலாளர், தற்காலிக தொழிலாளர், தினக்கூலி தொழிலாளர் ஆகியோரும் அடங்குவர் என திருத்தம் கூறுகிறது. ஒரு ஆலையில் குறைந்த பட்சம் 30 சதம் வரை பயிற்சியாளர்கள் வைத்துக்கொள்ளலாம் எனவும் திருத்தம் கூறுகிறது. காண்ட்ராக்ட் தொழிலாளர், தற்காலிக தொழிலாளர், தினக்கூலி தொழிலாளர், நிரந்தரத் தொழிலாளர்களுக்கு பதிலாக பயிற்சியாளர்களை பணியில் அமர்த்தி, உற்பத்தி செலவை குறைத்திட, தொழிலாளர்களின் உரிமைகளை பறித்திட பயிற்சியாளர் சட்ட திருத்தம் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும், குறைந்தபட்ச ஊதியம் என அரசு அறிவிப்பதில் அதிகபட்சம் 70 சதவீதம் பயிற்சியாளர்களுக்கு கிடைப்பதே அரிதானது.

தமிழகத்தில் பஞ்சாலைகளில் 90 சத தொழிலாளர்கள் பயிற்சித் தொழிலாளர்கள் தான். 2008-ம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், ஒரு ஆலையில் 10 சதம் மட்டுமே

பயிற்சியாளர் இருக்க முடியும் என்ற மசோதா நிறைவேற்றப்பட்டு, ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் இன்னமும் ஒப்புதல் கிடைக்கவில்லை. இது தான் மத்திய அரசு கூட்டாட்சித் தத்துவத்தை மதிக்கும் முறை.

தற்போது உத்தேசித்துள்ள சட்டத்திருத்தத்தின் மூலம், சட்டத்தின் விதிமுறைகளை மீறும் முதலாளிகளை கைது செய்து சிறையில் அடைக்க முடியாது.

## அரசின் திருத்தங்கள் ஏற்படுத்தும் விளைவுகள்

2014 மார்ச் மாதம் அரசு வெளியிட்ட 2011-12 தொழில் ஆய்வறிக்கைப்படி, நாட்டிலுள்ள 1,75,710 தொழிற்சாலைகளில், 1,25,301 தொழிற்சாலைகள் அதாவது 71.31 சதவீத தொழிற்சாலைகளில் 40-க்கும் கீழ் தொழிலாளர் உள்ளதால் அவை தொழிற்சாலையாக கருதப்படமாட்டாது. தொழிற்சாலை சட்டம் அமலாகாது. தொழில் தாவா சட்டத்திலுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையை 100- ஐ 300 ஆக்குவதன் மூலம், 300 வரை தொழிலாளரை பணியில் அமர்த்தியுள்ள நிறுவனங்கள் அரசின் முன் அனுமதியின்றி ஆட்குறைப்பு / ஆலை மூடல் செய்யலாம் என்ற திருத்தம் மூலம் 80 சதவீதத்திற்கும் அதிகமான தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர்கள் ‘அமர்த்து-துரத்து’ கொடுமைக்கு உள்ளாவர்கள்.

50 தொழிலாளர்கள் வரை காண்ட்ராக்ட் தொழிலாளரை பணியில் அமர்த்தும் காண்ட்ராக்டர், சட்டதிருத்தத்தினால் காண்ட்ராக்டராக பதிவே செய்யமாட்டார். தனியார் துறை, அரசு துறை என காண்ட்ராக்ட் கொத்தடிமை முறை எங்கும் தழைத்தோங்கும். அமைப்பு சார்ந்த தொழில்களில் நிரந்தர தொழிலாளர் எண்ணிக்கை தொடர்ச்சியாக குறைந்து வருகிறது. முறைசாரா தொழிலாளர் 90 சதமாக உள்ளனர். அமைப்பு சார் தொழில்களில், காண்ட்ராக்ட், தற்காலிக தொழிலாளர் அமைப்புசாரா தொழிலாளர்களைப்போல் பணிபுரிந்து வருகின்றனர்.

அமைப்புசார் தொழில்களை நடத்தும் நிறுவனங்கள் உற்பத்தி செலவை குறைப்பது என்ற பெயரில் குறைந்த உற்பத்தியில் தொழிலாளர்களை பணியில் அமர்த்தி கடுமையாக சுரண்டி வருகின்றன. திறமை வாய்ந்த இளைஞர்கள் வேலையின்றி அலைவதை முதலாளிகள் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். உற்பத்தித் துறையில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சியினால் வேலைவாய்ப்பு உயரவில்லை. உலகம் முழுவதும் இதே நிலை என ஐ.எல்.ஓ. சுட்டிக்காட்டுகிறது.

தொழிலாளர் சட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் திருத்துவதினால், எந்த ஒரு நாட்டின் பொருளாதாரமும் முன்னேறிவிடவில்லை. உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் கம்பெனிகளின் சுரண்டல் சாம்ராஜ்யம், மத்திய அரசின் தொழிலாளர் சட்டத் திருத்தங்களால் மேலும் விரிவடையும்.

தற்போது உள்ள தொழிற்சாலை சட்டங்களும், தொழில் தாவா சட்டங்களும் முழுமையாக அமுலாக்குவதில்லை என்பது தொழிற்சங்கங்களின் குற்றச்சாட்டு. அமுலாகாத சட்ட ஷரத்துகள் இருப்பதைக் கூட கார்ப்பரேட் நிறுவனங்களின் கண்களை உறுத்துகிறது. எனவே இவைகளில் மாற்றம் தேவை, தொழிலாளர்களுக்கு எந்தவிதமான உரிமைகளும் இருக்கக்கூடாது என முதலாளிகள் கருதுகிறார்கள். சுருங்கச் சொன்னால் ஒரு தொழிலாளியை எப்போது வேண்டுமானாலும் வேலைக்கு வைத்துக் கொள்வதற்கும், வேலையை விட்டு வெளியேற்றுவதற்கும் முழுமையான அதிகாரத்தை இச்சட்டத் திருத்தங்கள் முதலாளிகளுக்கு அளிக்கிறது.

அனைத்து தொழிற்சங்கங்களின் ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலமே இவைகளை தடுத்து நிறுத்த முடியும். ஒன்றுபட்ட தொழிற்சங்க இயக்கத்தை முன்னெடுத்து செல்வோம்.

உற்பத்தியின் பிரதான தூணாக தொழிலாளர் வர்க்கமே உள்ளது. உழைப்புச் சுரண்டல் தீவிரமடைந்து வருவதை உழைக்கும் வர்க்கம் இனியும் சகித்துக் கொள்ளமுடியாது. சாதி, மொழி, மத, இன உணர்வுகளுக்கு அப்பால் உழைக்கும் வர்க்கத்தை வர்க்கமாக ஒன்றுபடுத்துவதும், உழைக்கும் வர்க்கத்தின் நலன்களை, உரிமைகளை, வாழ்வாதாரத்தை பாதிக்கும் அரசின் கொள்கைகளுக்கு எதிரான வர்க்கப் போராட்டங்களை பாய்ச்சல் வேகத்தில் தீவிரப்படுத்துவோம்! ஒன்றுபடுவோம்! போராடுவோம்! முன்னேறுவோம்!

**- இரா.மங்கலபாண்டியன்**

# இந்திய தேசத்தில் பொதுத் துறைகள் உருவான பின்னணி

இந்திய தேசத்தின் விடுதலை கத்தியின்றி ரத்தமின்றி வந்ததல்ல. அளப்பரிய தியாகத்தால் வந்தது. பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறைகள், சிறை வாழ்க்கை, உயிர் தியாகம், சதி வழக்குகள் என அனைத்தையும் எதிர்கொண்டுதான் இந்தியா விடுதலை பெற்றது.

விடுதலை போராட்டத்தின்போது இந்தியா அரசியல் விடுதலை அடைந்தால் போதும் என்ற கொள்கை கொண்டவர்கள் இருந்தனர். இன்னொருபுறம் இந்திய விடுதலை என்பது பொருளாதார சமத்துவம், சமூகநீதியுடன் கூடியதாக இருக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டவர்கள் இருந்தனர். இடதுசாரிகள் இரண்டாவது நோக்கத்திற்காகத்தான் போராடினர்.

இந்தப் பின்னணியில் 1947இல் நமது நாடு விடுதலை பெற்றபோது தொழில்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. வேளாண்துறை மட்டுமின்றி, தொழில்துறை, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்னாற்றல் உள்ளிட்ட கட்டமைப்பு துறைகள், கல்வி, ஆரோக்கியம் ஆகிய மனிதவளத் துறைகள் ஆகிய அனைத்துமே பின்தங்கியிருந்தன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் முயற்சி தேவை என்பதும் இதற்கு அரசு மையப் பங்கு ஆற்றிட வேண்டும் என்பதும் இந்திய முதலாளிகள் உட்பட அனைத்துப் பகுதியினரின் பொதுக்கருத்தாக இருந்தது. கடந்த நூற்றாண்டில் ஏகாதிபத்திய நாடுகளின் அனைத்து சூழ்ச்சிகளையும் எதிர்ப்பையும் தகர்த்து பொருளாதார வளர்ச்சியில் மிகப்பெரிய சாதனைகளை படைத்திருந்த சோசலிச சோவியத் ஒன்றியத்தின் அனுபவமும் நமக்கு வழிகாட்டின. பொருளாதாரத்தை மேம்படுத்தவும் தொழில்மயமாக்கவும் அரசின் மையப்பங்கின் அவசியத்தையும் திட்டமிட்ட பொருளாதாரத்தின் அவசியத்தையும் உணர்த்தியிருந்தன.

## மத்திய அரசின் தொழில்கொள்கை தீர்மானங்கள்

இத்தகைய பின்புலத்தில் திட்டமிடுதலையும் அரசு பொதுத்துறை தொழில் நிறுவனங்களை அமைத்து கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதன் அவசியத்தையும் இந்திய பெருமுதலாளிகள் உள்ளிட்டு அனைவரும் ஏற்றுக் கொண் டனர். 1948, 1956 ஆகிய ஆண்டுகளில் அன்றைய மத்திய அரசு முன்வைத்த தொழிற் கொள்கை தீர்மானங்கள் நாட்டு வளர்ச்சிக்கு பொதுத்துறையின் முக்கியத்துவத்தை வலியுறுத் தின.

## கட்டமைப்புத் துறையில் முதலீடு செய்யும் சக்தி அன்று தனியாரிடம் இல்லை

முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையின் பகுதியாக பொரு ளாதார திட்டமிடல் மேற்கொள் ளப்பட்டது. அரசின் பட்ஜெட் மற்றும் பொதுவான பொரு ளாதார கொள்கைகள் சுரண்டும் வர்க்கங்களை சேர்ந்த ஒரு சிறிய பகுதிக்கு சாதகமாகவே பிர தானமாக தீர்மானிக்கப்பட்டன. கட்டமைப்பு மற்றும் கனரக தொழில்கள் ஆகியவற்றில் பொதுத்துறை வளர்ந்தது. ஏனெனில் இத்தகைய பிரம்மாண்டமான முதலீடுகளை மேற்கொள்வதற்கான வளங்கள் அன்று தனியார்துறையிடம் இல்லை. இப்பொதுத்துறை நிறுவனங்கள் இவ்வாறு கட்டப் பட்டது. பொருளாதாரத்தை தொழில்மயமாக்கிடவும், மேலைநாட்டு ஏகபோகங்கள் மீதான அப்பட்டமான சார்பு நிலையை தகர்க்கவும் ஓரள விற்கு உதவியது. இத்திட்டங் களின் மிகச் சிறப்பான அம்சத்தை தொழில் வளர்ச்சி யில் காணமுடியும். குறிப்பாக பொதுத்துறையில் சில கனரக இயந்திரங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அமைக் கப் ட்டதில் காணலாம்.

சோசலிச நாடுகளின், குறிப் பாக சோவியத் ஒன்றியத்தின் சீரான ஆதரவு இந்த முன்னேற் றங்களை சாத்தியமாக்கியது. காப்பீடு, வங்கிகள் நாட்டுடை மையாக்கப்பட்டன. நிலக்கரி, பெட்ரோலியம், துறைகள் பொதுத்துறையாகியது.

## பாரத் பெட்ரோலியம் உருவான வரலாறு

பொதுத்துறையின் முக்கியத் துவத்தை நாட்டின் சுயசார்புக்கு அதன் இன்றியமையாத பங்களிப்பை உணர்த்த ஒரு வரலாற்று அனுபவத்தை பகிரலாம்.

இன்று மத்திய அரசு லாபம் தரும் பாரத் பெட்ரோலிய கம்பெனியை தனியாருக்கு அந்நிய, இந்திய பெரும் கம்பெனிகளுக்கு விற்க முடிவு செய்துள்ளது. இது முற்றிலும் தவறான முடிவு. வரலாற்றை சற்று திரும்பிப் பார்ப்போம். 1950களில் இந்தியாவில் பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் மூன்று பன்னாட்டு கம்பெனிகளிடம் மட்டுமே இருந்தன. அந்த கம்பெனிகள் தங்கள் தாய் நிறுவனங்களிடம் இருந்து அதிக விலைக்கு கச்சா எண்ணெய் வாங்கியதாக கணக்கு எழுதி ஏராளமான அந்நிய செலாவணியை எடுத்துச் சென்றனர். இந்த நிலையில் 1960ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியம் மிகக் குறைந்த விலைக்கு கச்சா எண்ணெய் தர முன்வந்தது. ஆனால் மூன்று பன்னாட்டு கம்பெனிகளும் (எஸ்ஸோ, கால்டெக்ஸ், பார்மா ஷெல் கம்பெனிகள்) சப்பையான காரணங்களை சொல்லி சோவியத் கச்சா எண்ணெயை சுத்திகரிக்க மறுத்தன. இக் கம்பெனிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கிய காங்கிரஸ் அரசாங்கம், எண்ணெய் விலை பற்றி விசாரிக்க ஓர் ஆய்வுக்குழுவை அமைத்து தனது கடமையை முடித்துக் கொண்டது.

எனினும் இந்நிகழ்வுக்குப் பின்தான் இந்தியன் ஆயில் கம்பெனி உருவாக்கப்பட்டு, சோவியத் யூனியன் தந்த மலிவான எண்ணெயை நாம் அதிகமாக பயன்படுத்த முடிந்தது. பொதுத்துறையின் அவசியத்தை இந்த நிகழ்வுகள் நிரூபித்தன. பின்னர் இந்த மூன்று அந்நிய கம்பெனிகளும் நாட்டை விட்டு வெளியேறின மேற்படி நிறுவனங்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டன. அத்தகைய நாட்டுடைமை நடவடிக்கையில் மலர்ந்ததுதான் பாரத் பெட்ரோலியம் கம்பெனி. இவ்வாறு நாட்டின் பொருளாதார சுயசார்புக்கும், இறையாண்மைக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் பெரும் பங்காற்றியுள்ளன.

இத்தகைய பங்காற்றிய பொதுத்துறை நிறுவனங்களைத்தான் தற்போதைய மத்திய அரசு தீவிரமாக விற்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதை முறியடிக்கும் முயற்சியாகத்தான் 2020 ஜனவரி 8 அகில இந்திய வேலைநிறுத்தத்தில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன முடிவின்படி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் பங்கேற்றது. பொதுத்துறையை பாதுகாக்கும் இப்போராட்டங்களை மேலும் வலிமையாக முன்னெடுத்துச் செல்ல வேண்டிய கடமை நம்முன் உள்ளது.

- **கரூர் எம்.எஸ்.**

# சந்திப்புகளும் முறையீடுகளும்

■ தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் 31.01.2020 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களை நேரில் சந்தித்து நமது முன்னாள் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் தற்காலிக பணிநீக்கம் ரத்து செய்வது குறித்தும் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை தோழர்களின் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் செய்ததை ரத்து செய்வது குறித்தும் விரிவாக பேசப்பட்டது. அதனடிப்படையில் நமது சங்கத்தின் கோரிக்கையை ஏற்று நமது முன்னாள் மாநிலத் தலைவரின் தற்காலிக பணிநீக்கம் விரைவில் ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கிறேன் என்றும், அதேபோல் கோவை மாவட்ட தோழர்களின் மாறுதல்களையும் ரத்து செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்தார்.

■ மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களை 1.2.2020 அன்று புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் உள்ள அவரது இல்லத்தில் மாநில நிர்வாகிகள் சந்தித்து நமது முன்னாள் மாநில துணைத் தலைவர் சுப்பிரமணியன் மற்றும் நான்கு செவிலியர்கள் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டது குறித்து பேசப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தான் தொகுதி பணி உள்ளதால் சென்னையில் சந்தித்து பேசிக் கொள்ளலாம் என உறுதியளித்தார்.

■ தலைமைச் செயலகத்தில் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் மாண்புமிகு ஜெயக்குமார் அவர்களை அரசு ஊழியர் சங்க மாநில நிர்வாகிகள் சந்தித்து ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின்போது புனையப்பட்ட 17(பி) மற்றும் பழி வாங்கும் நடவடிக்கையை ரத்து செய்யும்படி வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் செயலர் அவர்களை சந்தித்து முறையீடு செய்யப்பட்டது.

# வீழ்த்த நினைப்பவர்களை வீழ்த்துவோம்!

தமிழ்நாடு அரசுஊழியர் சங்கத்தையும் அதன் இயக்க நடவடிக்கைகளையும் பலவீனப்படுத்தும் வகையிலும் இந்த இயக்கத்தில் முன்னணி தோழர்களாக இருந்து செயல்பட்டவர்கள் சிலர் மாநில செயற்குழு 13ஆம் மாநில மாநாட்டில் முன்னிலைப்படுத்திய புதிய நிர்வாகிகளின் பெயர்களை புறக்கணித்து தேர்தலுக்கு வழி வகுத்து தேர்தலில் ஒரு அணி அமைத்து போட்டியிட்டு அந்த அணி மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்களால் மறுதலிக்கப்பட்ட பின்னரும் சங்கத்தின் மாநில செயற்குழுவின் பெரும்பான்மைத் முடிவுகளே என்பதை ஏற்காமல் மீண்டும் சங்கத் தலைமையின் மீது வசைபாடும் செயல்களையும் சங்கத்தின் கண்ணியத்தைக் குலைக்கும் வகையிலும் சங்கத்தை முடக்கும் வகையிலும் செயல்பட்டு வருகின்றனர்.

13ஆம் மாநில மாநாட்டில் இவர்களின் இயலாமை அனைவருக்கும் தெரிந்த பின்னர் தோல்வியின் விரக்தியில் இப்போது தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் அரசு ஊழியர்கள், சங்க உறுப்பினர்கள் மற்றும் முன்னணி ஊழியர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்பட ஆரம்பித்துள்ளனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைமையில் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக்குழு மற்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கமும் அதன் தலைமையில் செயல்பட்டுவரும் போராட்டக்குழுவில் அங்கம் வகிக்கும் துறை வாரிசங்கங்களும் அங்கம் வகிக்கும் ஜாக்டோ ஜியோ அமைப்பு, மாநில/மாவட்ட மகளிர் துணைக்குழு என எல்லாவற்றுக்குமான அமைப்புகள் சங்க அமைப்பு விதிகளின்படி ஏற்படுத்தப்பட்டு செயல்பாடுகளில் இருந்து கொண்டிருக்கும் நிலையில் இவர்கள் தங்கள் சுயலாபங்களுக்காகவும், சங்கஉறுப்பினர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் கூட்டங்கள் நடத்தியும் அதனைத் தொடர்ந்து தற்போது துறைவாரி சங்கங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திட முனைந்துள்ளனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தில் அனைத்துத்துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக்குழு என்று ஒன்று இருக்கும் போது நீங்கள் ஏன் தனியாக அமைப்பை ஏற்படுத்துகிறீர்கள் என்று யாராவது கேட்டால் இது ஒன்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு எதிரானது அல்ல என்ற ஒரு பொய்யையும் தமிழ்நாடு அரசுஊழியர் சங்கம் எந்த ஒரு துறை சங்கத்தையும் கட்டுப்படுத்த முடியாது என்றும் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

இந்த சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும் தனிப்பட்ட சில நபர்கள் சேர்ந்து ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் சங்கத்திற்கு எதிராக கூட்டம் கூட்டுவதும், சந்திப்புகள் நடத்துவதும் கேட்டால் நாங்கள் சங்கத்திற்கு எதிரானவர்கள் அல்ல என்றும் நாங்கள் அரசு ஊழியர் சங்க உறுப்பினர்கள்தான் என்று கூறுவதும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க அமைப்பு விதிகளுக்கு எதிரானது மட்டுமல்ல சட்டவிரோதமானதும்கூட என்று அந்த நபர்களுக்குத் தெரிந்தும் அவர்கள் இத்தகைய காரியத்தை செய்கிறார்கள் என்றால் அவர்கள் தோழர் எம்.ஆர்.ஏ., ஆர்.எம்.எஸ். போன்றோர் கட்டிக்காத்து வளர்த்து வந்த இந்த இயக்கத்திற்கு செய்யும் துரோகமாகும்.

பல அன்பான வேண்டுகோள், அறிவுரைகள், எச்சரிக்கைகள் எனஎல்லா நிலைகளையும் கடந்த பின்னரும் இவர்கள் சங்கத்தை இழிவு படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் விமர்சனம் செய்து வருவது மட்டுமல்ல அதையும் தாண்டி சங்கத்தை முடக்கும் செயல்களில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதற்கு இவர்கள் சங்கத்திற்கு எதிராக உயர்நீதிமன்றம் மற்றும் கீழமை நீதிமன்றங்களில் தாக்கல் செய்துள்ள மூன்று வழக்குகளே சாட்சி. மேலும் சங்கத்தின் பதிவு புதுப்பித்தலை அது குறித்த புரிதல் இல்லாமலேயே கேள்விக்குறியாக்கி சங்கங்களின் பதிவுத்துறை தலைவரிடம் முறையீடு செய்து கடந்த 22.01.2020ம் தேதி சங்கங்களின் பதிவுத் துறை தலைவர் நம்மை அழைத்து விசாரிக்கும் நிலையையும் உருவாக்கி யுள்ளனர். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது இத்தனை காலம் இந்த இயக்கத்தில் இருந்த இவர்கள் தாங்களாக செயல்படுகிறார்களா அல்லது அந்நிய சக்திகள் யாரேனும் சங்கத்துக்கு எதிராக பிளவை உண்டாக்க தீவிர முயற்சிகள் செய்து வருகின்றனரா என்ற ஐயப்பாடு உறுதியாகியுள்ளது.

இத்தகைய நபர்கள் சங்கத்திற்கு எதிரான செயல்பாடுகள் பொறுமையின் எல்லைக்குமேல் சென்றுவிட்ட நிலையில் அதை இனியும் சகித்துக்கொள்வது என்பது இந்த இயக்கத்திற்கும் இயக்கத்தின் வளர்ச்சிக்கும் முட்டுக் கட்டைகளாகவே இருக்கும். இதன் காரணமாகவே **மேற்படி நபர்கள் அமைத்திருக்கும் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழுவை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அங்கீகரிக்கவில்லை. மேலும் தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் அமைப்பாளர்களாக இருக்கக்கூடிய, இயங்கக்கூடிய அத்தனை நபர்களையும் இந்த ஆண்டின் சங்க உறுப்பினர்களாக சேர்ப்பத்தில்லை என்று தீர்மானித்ததன் அடிப்படையில் வட்ட, மாவட்ட நிர்வாகிகள் மற்றும்** தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் மேற்படி நபர்கள் மேற்கொள்ளும் சங்க அமைப்பு விதிகளுக்கு எதிரான செயல்களில் கலந்து கொள்வதை தவிர்த்து வீழ்த்த நினைப்பவர்களை வீழ்த்தி காட்டுவோம்!

**- மாநில மையம்**

# மாவட்ட அளவிலான முன்னணி ஊழியர் கூட்ட நிகழ்வுகள்

## கரூர்

*01.02.2020 அன்று கரூர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் மு.சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் கெ.சக்திவேல் வரவேற்புரையாற்றினார். மாநிலத் தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் அ.செல்வம், மாநிலப் பொருளாளர் எம்.பாஸ்கரன், மாநிலத் துணைத் தலைவர் ஆர்.மங்களபாண்டியன் ஆகியோர் பங்கேற்று சங்கத்தின் கடந்த கால வரலாறு, ஸ்தல மட்ட கோரிக்கைகளுக்கான போராட்டத்தின் அவசியம், முன்னணி ஊழியர்களின் பங்கு, 2020ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை, அரசு ஊழியர் மாத இதழ் சேர்க்கை, இடைவிடாத ஊழியர் சந்திப்பு, போராட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து உரையாற்றினர். மாநில மகளிர் துணைக்குழு உறுப்பினரும், மாவட்ட இணைச் செயலாளருமான எம்.செல்வராணி நன்றி கூறினார். இதில் 20 பெண்கள் உட்பட60 பேர் கலந்து கொண்டனர். இதில் நிதி நிலுவைகள் அனைத்தும் நேர்செய்து 2020ஆம் ஆண்டுக்கான உறுப்பினர் சந்தா 500 மற்றும் 200 அரசு ஊழியர் பத்திரிக்கை சந்தா விற்கான தொகையும் மாவட்ட மையத்தின் சார்பில் மாநில நிர்வாகிகள் வசம் தரப்பட்டது.*

## தருமபுரி

*22.01.2020 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவிற்கிணங்க, முன்னணி ஊழியர் சந்திப்பு இயக்கம் 02.02.2020 அன்று காலை தருமபுரியில் உள்ள பெரியார் மன்றத்தில் நடைபெற்றது. முன்னணி ஊழியர் கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஏ.சேகர் வரவேற்புரையாற்றினார்.*

*மாநில தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் ஆ.செல்வம், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன், மாநில துணைத் தலைவர் கோ.பழனியம்மாள் ஆகியோர் சங்கத்தின் கடந்த கால வரலாறு, ஸ்தலமட்ட கோரிக்கைகளுக்கான போராட்டத்தின் அவசியம், முன்னணி ஊழியர்களின் பங்கு, உறுப்பினர் சேர்க்கை, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா, இடைவிடாத ஊழியர் சந்திப்பு, போராட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த அனுபவ பகிர்தலோடு சிறப்புரையாற்றினர்.*

*தருமபுரி மாவட்ட மையத்தின் சார்பில் 2020ஆம் ஆண்டிற்கான 1,000 உறுப்பினர் சந்தா பதிவுத் தொகையாக ரூ 20,000/-மாநில நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டது. மாவட்ட பொருளாளர் கே.புகழேந்தி நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார். இதில் 38 பெண்கள் உட்பட 153 பேர் கலந்துகொண்டனர்.*

## கிருஷ்ணகிரி

*22.01.2020 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவிற்கிணங்க, முன்னணி ஊழியர் சந்திப்பு இயக்கம் 02.02.2020 அன்று மாலை கிருட்டிணகிரியில் உள்ள வருவாய்த் துறை அலுவலர் சங்க கட்டத்தில் நடைபெற்றது. முன்னணி ஊழியர் கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் வரவேற்புரையாற்றினார்.*

*மாநில தலைவர் மு.அன்பரசு, பொதுச் செயலாளர் ஆ.செல்வம், மாநில பொருளாளர் மு.பாஸ்கரன், மாநில துணைத் தலைவர் கோ.பழனியம்மாள் ஆகியோர் சங்கத்தின் கடந்த கால வரலாறு, ஸ்தலமட்ட கோரிக்கைகளுக்கான போராட்டத்தின் அவசியம், முன்னணி ஊழியர்களின் பங்கு, உறுப்பினர் சேர்க்கை, அரசு ஊழியர் மாத இதழ் சந்தா, இடைவிடாத ஊழியர் சந்திப்பு, போராட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்த அனுபவ பகிர்தலோடு சிறப்புரையாற்றினர்.*

*கிருட்டிணகிரி மாவட்ட மையத்தின் சார்பில் 2020ஆம் ஆண்டிற்கான 1,000 உறுப்பினர் சந்தா பதிவுத் தொகையாக ரூ 20,000/-மாநில நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டது. மாவட்ட பொருளாளர் வி.தேவராஜ் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார். இதில் 27 பெண்கள் உட்பட 89 பேர் கலந்துகொண்டனர்.*

❖

# போராட அழைக்கும் பட்ஜெட் பாராட்டுக்குரியதே!

இதுதான் இருக்கும் என்று ஏற்கெனவே தெரிந்திருந்தாலும், எதிர்பாராத விதமாக ஏதாவது அறிவிப்பு வராதா என்ற நப்பாசையில் நிறைய பேர் நிர்மலா சீதாராமனையே டிவியில் பார்த்துக்கொண் டிருந்ததுதான் மிச்சம். அரசு ஊழியர்கள் செலுத்தும் வருமான வரியில் சென்ற ஆண்டே ஏதேனும் வரிச்சலுகை கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஏமார்ந்த நிலையில் இந்த ஆண்டில் நிச்சயம் கிடைக்கும் என்று நம்பிக்கையில் இருந்தவர்களுக்கு கோயில் பிரசாதம் கொடுத்திருக்கிறார் அவர். ஆண்டு வருமானம் இரண்டரை லட்சம் ரூபாய் வரை உள்ளவர்களுக்கு வரியில்லை என்பதை இப்போது ஐந்து லட்சமாக மாற்றியிருக்கிறார். ஐந்து லட்சம் முதல் பத்து லட்சம் ரூபாய்வரை வருமானம் உள்ளவர்களுக்கு ஏற்கெனவே இருந்த 20 சதவீத வரியை ரூ.5 - 7.50 லட்சம் வரை 10 சதவீதமாகவும் ரூ.7.50 - 10 லட்ச ரூபாய் வருமானம் பெறுபவர்களுக்கு 15 சதவீதமாக வும் மாற்றியிருக்கிறார். இதைப்போலவே ஒவ்வொரு படியிலும் 5 சதவீதம் வரி செலுத்துவதில் குறைக்கப் பட்டுள்ளது. இது யானைப்பசிக்கு சோளப்பொறி என்றாலும் இதையும் டிவி சானல்கள் அரசாங்க ஊழியர்களுக்கு மத்திய அரசு அள்ளிக் கொடுத்து விட்டதுபோல திரும்பத் திரும்பக் காட்டிக் கொண் டிருந்தார்கள். ஆக அரசு ஊழியர்களைப் பொறுத்த வரை இந்த பட்ஜெட் அழுகின்ற குழந்தைக்கு லாலிபாப் காட்டி ஏமாற்றும் வேலை. நாடு இன்று இருக்கும் நலிந்த பொருளாதார நிலையில் ஐந்து சதவீதமே அளப்பரிய சாதனை என்று கூறும் மோடியின் விசுவாசிகளிடம் நாம் கேட்க வேண்டிய கேள்வி ''நாடு இத்தகைய நலிந்த நிலைக்கு போக யார் காரணம்?'' என்பதுதான்.

பொதுவாக இந்த பட்ஜெட்டில் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் காண்பதற்சகுப் பதிலாக, பொருளாதாரத்தின் நிலையற்ற தன்மை யினை மறைக்கும் போக்கு கையாளப்பட்டுள்ளது. இதை ஆழ்ந்து நோக்குங்கால், மோடி அரசாங்கமானது கார்ப்பரேட்டுகள் மற்றும் பணம் படைத்தோரின் நலன்களுக்கானதே என்பதைக் காட்டும் விதத்தில் பட்ஜெட் அமைந்திருக்கிறதேயொழிய, பொருளாதார மந்தத்தை சீர்படுத்தும் ஆணி வேராக இருந்து வரும் விவசாயிகள், தொழிலாளிகள் மற்றும் சுயவேலை வாய்ப்பை நோக்கித் தள்ளப்பட்டுள்ள உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்கள் குறித்தோ, வேலை யின்மையைப் போக்குவது குறித்தோ, கிராமப்புற பொருளாதார வீழ்ச்சி குறித்தோ கொஞ்சமும் கவலைப்படவில்லை என்பது தெளிவாகிறது. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் வருமானத்தைப் பெருக்கவும், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் ஆக்கபூர்வமான திட்டங்கள் எதுவும் பட்ஜெட்டில் இல்லை. உழைக்கும் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரித்து உள்நாட்டுத் தேவைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அரசு மானிய வெட்டுக்களை மேலும் அதிகரிப்பதற்கும். கார்ப்பரேட்டுகளுக்கு நாட்டின் சொத்துக்களை தாரை வார்ப்பதற்குமே திட்டமிடப் பட்டுள்ளது. விவசாயிகள் கடன் தள்ளுபடி, தொழி லாளர்களின் வருமானத்தைப் பெருக்க வழி, கிராமப்புற வேலை உறுதித் திட்டத்தை செயல் படுத்துதல் போன்றவை எதுவும் இந்த பட்ஜெட்டில் பெயரளவுக்குக் கூட இடம்பெறவில்லை.

சமூகப் பாதுகாப்பு ஏதுமில்லாத இந்தியாவில் மக்கள் பணத்தை சேமிப்பதற்கு கொடுக்கப்பட்டு வந்த சலுகைகள் நீக்கப்பட்டுள்ளன. கல்விக்கு நிதியைக் குறைத்து சமூக நீதிக் கொள்கையின் கட்டுமானத்தைச் சீர்குலைக்கும் நோக்கில் பாஜக அரசு செயல்படுகிறது என்பதையே இந்த நிதிநிலை அறிக்கை காட்டுகிறது. தமிழகத்தைப் பொறுத்த மட்டில் உட்கட்டமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட வில்லை. ஜிஎஸ்டியால் வேலையிழந்த லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு எந்த நிவாரணமும் இல்லை. சிந்துசமவெளி நாகரீகத்துக்கு 'சரஸ்வதி சிந்து நாகரீகம்' என்று பெயர்சூட்டி, கீழடியில் கிடைத்த தமிழர் நாகரீகம் உள்ளிட்ட பல ஆய்வுகளின் முடிவையும் மாற்றி வரலாற்றை திரித்துக்கூற முயற்சிப்பதும், சமூக நீதிக்கு எதிரான "புதிய கல்விக் கொள்கையை விரைந்து செயல் படுத்துவோம்'' என்று அறிவிப்பதும் தமிழகத்திற்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளாகும்.

இந்திய நாட்டின் சொத்துக்களை பெரிய அளவில் விற்பதற்கும், எல்ஐசி மற்றும் இன்சூரன்ஸ் துறை களை தனியாரிடம் தாரை வார்ப்பதற்கும், வேலை யின்மை, விவசாய நெருக்கடி மற்றும் நாட்டின் பெரும்பான்மை மக்கள் மீது ஏற்றப்பட்டுள்ள துன்பங்கள் இன்னும் அதிகரிக்க வழிகோலியுள்ள இந்த நிதிநிலை அறிக்கை தானாகவே போராட் டங்கள் கிளர்ந்தெழச் செய்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய கிளர்ச்சிப் போராட்டங் களில் அரசு ஊழியர்களும் ஆசிரியப் பெருமக்களும் பங்கேற்று போராட்டத்தை உக்கிரப்படுத்துவதுன் மூலம் மட்டுமே பொதுவுடைமைச் சமுதாயத்திற்கான பாதைகளை அமைக்க முடியும். போராட்டங்களை உக்கிரப்படுத்த ஒவ்வொரு குடிமகளையும் உந்தித் தள்ளியுள்ள வகையில் இந்த பட்ஜெட் பாராட்டுக் குரியதே!

**- வேந்தன்**

மைடியர் காம்ரேட்ஸ்-6

# எந்த ஆணியையும் விட்டுவிடாதீர்கள்!

"**ஒ**ரு ஆணியும் புடுங்க வேணாம்" நேசமணி வடிவேலுவின் இந்த உலகப் புகழ் பெற்ற வசனம் உங்களுக்கு தெரிந்ததே. ஆனால் அதைவிட புகழ்பெற்ற ஒரு வசனம் "எந்த ஆணியையும் விட்டுவிடாதீர்கள்" என்பதாகும். அதாவது சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்று தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள். தொழிற்சங்க இலக்கணப்படி சொல்ல வேண்டுமானால் 'எல்லோரிடமும் தோழமை கொள், எல்லோருக்கும் தோழமை சொல்' என்று சொல்லலாம்.

"எந்த ஆணியையும் விட்டுவிடாதீர்கள்" என்பது பெஞ்சமின் பிராங்க்ளின் சொன்ன கதையாகும். இரண்டு நாடுகளுக்கிடையில் நடந்த போரில் தோற்றுப்போன ஒரு ராஜ்ஜியத்தின் குதிரைப்படை தளபதியிடம் எப்படி தோற்றுப் போனீர்கள் என்று கேட்டபோது அவன் சொன்னானாம், 'ஆணி இல்லாததால் குதிரைக்கு லாடம் அடிக்க முடியவில்லை. லாடம் அடிக்க முடியாமல் போனதால் குதிரை போர்க் களம் செல்லவில்லை. குதிரை செல்லாததால் வீரன் வரவில்லை. வீரன் வராததால் போரில் தோல்வி. தோல்வி கண்டதால் ராஜ்ஜியம் போயிற்று. அந்த ஆணி மட்டும் கிடைத்திருந் தால், போரில் நாங்கள்தான் வெற்றி பெற்றிருப் போம்' என்று. எனவே எந்த ஆணியையும் விட்டுவிடாதீர்கள். ஆணியை விட்டுவிட்டால் ராஜ்ஜியத்தை இழப்பீர்கள் என்று பெஞ்சமின் பிராங்க்ளின் அந்த கதையை முடிப்பார். சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்பதை விளக்க இந்தக் கதையை சொல்வார்கள்.

இந்தக் கதையை இயக்கத்தில் துடிப்பாய் இயங்கும் முன்னணி தோழர்கள் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அலுவலகத்திலோ பிற இடங்களிலோ நாம் கவனிக்க வேண்டியது இயக்கத்தைப் போற்றி பேசுபவர்களை அல்ல. இயக்கத்தைப் பற்றி விமர்சனம் செய்பவர்களை. நமது இயக்கத்தைப் பற்றி எதிர்கருத்து சொல்பவர்களை எதிரிகளாகப் பார்க்காமல் அவர்களுக்கு அத்தகைய ஒரு சிந்தனை எதனால் தோன்றியிருக்கும் என்று கண்டறிய வேண்டும். சங்க நிர்வாகிகளில் சில தனிப்பட்ட நபர்களின் குறிப்பிட்ட குணாதியசங் களால் நிகழ்ந்தவையாகக்கூட அது இருக்கலாம். "என்னமோ தெரியலீங்க அந்த நிர்வாகியை பார்த்தால் நல்ல அபிப்பிராயமே வரமாட்டேங்குது" என்று நம் காதுபட பேசுபவர்களை நாம் கவனித்திருப்போம். குறிப்பிட்ட அந்த நிர்வாகியுடன் அந்த நபர் பேசிக்கூட இருக்க மாட்டார். ஆனால் அவரிடம் சென்று விசாரித்தால் "என் மைண்டுக்கு என்னவோ அவர் முகம் செட்டே ஆகலீங்க. அவர் குடிப்பாரா? தம், கிம் எதுனா அடிப்பாரா?" என்று விசாரிக்க வந்தவர்களுக்கே கேள்விக்கணைகள் வரும். "தோழர் அவர் அப்படிப்பட்ட ஆளெல்லாம் கிடையாது. உங்களுக்கு யார் இப்படியெல்லாம் சொன்னது?" என்று திருப்பிக் கேட்டால் "யாரும் சொல்லலீங்க பார்க்க அதுமாதிரி தெரியறாரு. அதனால சொன்னேன் என்னமோ தெரியலீங்க, அவரை பாக்கறப்ப மத்தவங்ககிட்ட அவர் பேசறப்ப பார்த்தால் அவர் ஒரு பூடகமான ஆள் மாதிரியாவே தெரியறாரு" என்று நம்மிடமே சங்கத்தின் நிர்வாகி மீது சந்தேகம் சொல்வார். "உங்களுக்கு எதுனா அமானுஷ்ய சக்தி இருக்கா?" என்று கேட்டால், "அப்படியெல்லாம் ஒன்னு மில்லீங்க. சில பேரை பார்த்தால் தோணுமில்ல... அதுதான், எனக்கு இதுவரைக்கும் தோணுனது எல்லாம் 90 சதவீதம் மேட்ச் ஆகியிருக்கு" என்று வேறு சொல்வார்.

இத்தகைய ஆணிகளை அவை வளைந்து போனதால் பிரயோசனம் இல்லை என்று விட்டுவிடக் கூடாது. அவர்களுடன் கொஞ்சம் ஆழமாக ஊடாட வேண்டும். "ஆளைப் பார்த்து

ஒருத்தரை எடை போடதீங்க தோழர். இவ்வளவு பெரிய இயக்கத்துல ஒரு பொறுப்புல இருக்கறவர் அந்த பொறுப்புக்கு அவருடைய தோற்றத்தை வச்சு வரல, செயல்திறனை வச்சு வந்திருக்காரு. இயக்கத்துக்கு வாங்க அவர் செயல்பாடுகளை கவனிங்க. அப்புறம் முடிவெடுங்க. பார்த்த உடனே ஈர்க்கற ஆளுமையில்லை அவரு. பார்க்கப் பார்க்க... பழகப் பழக ஈர்க்கற தோழமைதான் அவரோட பவரு'' என்ற யதார்த்தத்தை உணர்த்த வேண்டும். இந்த காலத்து இளைஞர்கள் சினிமாக்கள் வழியாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் ஹீரோ என்றால் இப்படி வில்லன் என்றால் இப்படி இப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளை வைத்திருக்கிறார்கள். அத்தகையவர்களுக்கு இயக்கத்தின் தோழமைகளுக்கு இரண்டு முகங்கள் கிடையாது ஒரே முகம்தான் என்பதை புரிய வைக்க வேண்டும்.

இதை வலியுறுத்துவதற்குக் காரணம் ஒரு இயக்கம் என்பது தலைவர்களையோ நிர்வாகி களையோ முன்னணித் தோழர்களையோ மட்டுமே நம்பி இயங்கிவிட முடியாது. புதிய புதிய உறுப்பினர்களை சங்கத்திற்கு அழைத்து வர வேண்டும். இன்றைய காலகட்டத்தில் செல் போன்கள் சமூக வலைத்தளங்கள் போன்ற வற்றின் காரணமாக அரசு வேலைகளிலோ அலுவலகங்களிலோ சேரும் இளைய தலைமுறைக்கு சங்கத்தைப் பற்றிய புரிதல்களும் தேவைகளும் புரியாதனவாக அல்லது புதிதாக இருக்கலாம். அவர்களுக்கு அதை விளக்கி சங்கத்திற்கு வரவழைக்க வேண்டிய கடமை முன்னணி ஊழியர்களுக்கு உள்ளது. எங்கெல்லாம் விதைக்க முடியுமோ அங்கெல்லாம் இயக்கத்தை விதைத்துக் கொண்டே இருக்க வேண்டும். எதிர்காலத்திற்கான விவசாயத்தை இப்போதே துவங்க வேண்டும்.

ஒரு இயக்கத்திற்கு எது முக்கியம்? நிர்வாகிகளா? முன்னணி ஊழியர்களா? புதிய உறுப்பினர்களா? என்று கேட்டால் நான் 'புதிய உறுப்பினர்கள் தான்' என்று கைதூக்குவேன். அவர்கள் இயக்கத்தின் அடித்தட்டல்ல அடிப்படை, இன்னும் சொல்லப்போனால் அடித் தளம். சதுரங்க ஆட்டம் இந்தியர்கள் கண்டு பிடித்த விளையாட்டு. இந்த ஆட்டத்தில் முன்னணியில் நிற்பவர்கள் ராஜாவோ ராணியோ, குதிரைகளோ, யானைகளோ, தேர்ப்படையோ அல்ல போர்வீரர்கள் எனும் காலாட்படைதான். சதுரங்க விளையாட்டில் ஒவ்வொரு காய்க்கும் ஒரு சக்தி உண்டு. யானையா எந்தப்பக்கத்திலும் நேராக மட்டும் போகும், பிஷப் எனும் தேரோ எந்த திசையிலும் குறுக்காக போகும் குதிரை எல் வடிவத்தில் 3 சதுரங்கள் தாவும் இவை எல்லாவற்றையும் விட சக்தி படைத்தவர் ராணி. அவர் தேர்ப்படை பலம், யானை பலம், போர்ப் படை வீரர் பலம் என்பன கொண்ட சூப்பர் பவர்.

சதுரங்க விளையாட்டில் குறைந்த அதிகாரமும் சக்தியும் உடையவர் யார் என்றால் அது போர்வீரர்கள்தான். அவர்களால் ஒவ்வொரு கட்டமாகத்தான் முன்னேற முடியும். அதுவும் முன்னோக்கி மட்டுமே செல்ல முடியுமே தவிர பின்னோக்கி வரமுடியாது. மற்ற காய்களை ஒப்பிடும்போது போர்வீரன் அப்பாவிதான். வெட்டு விழுந்தால் முதலில் இலக்காகக் கூடியவன் அவன்தான். ஆனால் அவனுக்கு அந்த ஆட்டத்தில் யாருக்கும் இல்லாத ஒரு வரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது போர்வீரன் எதிர்திசையில் முன்னேறி கடைசி கட்டத்தை அடைந்து விட்டால் எதுவாக வேண்டுமானாலும் உருமாறி விடலாம். ராணியின் பவரோ, குதிரையின் பவரோ, யானையின் பவரோ எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். இந்த வரமும் அதிகாரமும் சதுரங்க விளையாட்டில் வேறு எந்த காய்களுக்கும் தரப்படவில்லை. போர்த்திறம் நிறைந்த இந்தியர்கள் சதுரங்கம் என்ற போர் விளையாட்டில் போர் வீரனுக்கு கொடுத்திருக்கும் முக்கியத்துவம் சாதாரணமான தல்ல. இதிலிருந்தே ஒரு ராஜ்ஜியத்திற்கு புதிது புதிதாக போர்வீரர்கள் வேண்டும் என்பது அக்காலத்திலேயே உணரப்பட்டிருக்கிறது, உணர்த்தப்பட்டிருக்கிறது. அவன் ஒருவனால் மட்டும்தான் நினைத்தால் ராணியாக, மந்திரியாக, முப்படைகளில் ஒரு படைத் தளபதியாக மாறமுடியும். ராஜ்ஜியத்தை ராணியும் ராஜாவும் ஆளலாம். ஆனால் அந்த ராஜாங்கத்தை பாதுகாப்பதில் முக்கியப் பங்கு போர்ப்படை வீரர்களுக்கு என்பதை ராஜாக்கள் வரலாறு மட்டுமல்ல ராஜ விளையாட்டும் சொல்கிறது. இதுவே இயக்கத்திற்கும் பொருந்தும். எனவே தோழர்களே இனி நமது கடமை இயக்கத்திற்கு நாள்தோறும் புதிய உறுப்பினர்களைத் தேடுவதாக இருக்கட்டும். அதனால் இனிமேல் எந்த ஆணியையும் விட்டுவிட வேண்டாம் நாம்.

**- ஜிஜி**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கம்

சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் 26.01.2020 அன்று நாகப்பட்டினம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிட கூட்ட அரங்கில் மாநிலத் தலைவர் சி.பரமேஸ்வரி தலைமையில் நடைபெற்றது.



மாநிலச் செயலாளர் பா.ராணி நடந்துள்ள வேலைகள் குறித்து விளக்க உரையாற்றினார். மாநில துணைத் தலைவர் களஞ்சியம் மற்றும் மாநில இணைச் செயலாளர் ஏ.பிரேமலதா ஆகியோர் பொது சுகாதாரத் துறை இயக்குநர் உடனான சந்திப்புகள் குறித்து விவரித்தார். பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த மாநில செயற்குழு உறுப்பினர்கள் விவாதங்களில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில தற்காலிக பொதுச் செயலாளராக பா.ராணி (நாகப்பட்டினம்), துணைத் தலைவர்களாக ராணி (திருப்பூர்), ஜெயலெட்சுமி (கிருஷ்ணகிரி) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழ்நாடு கிராம சுகாதார செவிலியர் சங்கத்தின் மாநில மாநாட்டை 08.02.2020 இரண்டாவது சனிக்கிழமை அன்று நாகப்பட்டினத்தில் நடத்துவது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நாகை மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக நாகப்பட்டினம் மாவட்டத் தலைவர் எம்.மரகதம் நன்றி கூறினார்.

## தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கம்

சங்கத்தின் மண்டல அளவிலான கருத்தரங்கம் 26.12.2019 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்றது. **"கடந்து வந்த பாதையும், எதிர்கால சவால்களும்"** என்ற தலைப்பில் முன்னாள் பொதுச் செயலாளர் இரா.ஜோதி கருத்துரை யாற்றினார். சங்கம் தோன்றியது முதல் இன்று வரையிலான நிகழ்வுகள் குறித்தும், அரசு ஊழியர்கள் கோரிக்கையும் அரசின் நிலைபாடும் மற்றும் நம் எதிர்கால சவால்கள் போன்றவை குறித்து எழுச்சியுரையாற்றினார்.



**"போராட்டங்களும் படிப்பினைகளும்"** என்ற தலைப்பில் அரசு ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆ.செல்வம் கருத்துரை வழங்கினார். அலுவலக நடைமுறை குறித்து மாநிலத் தலைவர் சீ.பிரபுராம் பயிற்சி வகுப்பு நடத்தினார். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநில துணைத் தலைவர்கள் இரா.பாஸ்கரன் மற்றும் ம.இராஜன் ஆகியோருக்கு பணி நிறைவு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. மாநில பொதுச் செயலாளர் இரா.ந.நம்பிராஜன் மற்றும் முன்னாள் மாநில நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். மாநிலப் பொருளாளர் சு.தங்கவேலு நன்றி கூறினார். இதில் 25 பெண்கள் உட்பட 95 ஊழியர்கள் பங்கேற்றனர். ❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com